உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை (11-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:348

## ஜனாதிபதி 19ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ள

# நாடாளுமன்றத்தை உடன் கூட்ட கட்சித் தலைவர்கள் கோரிக்கை

## பெரும்பான்மை எம்.பிக்கள் அதனை எழுத்துமூலம் சமர்ப்பித்தால் பரிசீலிக்க சபாநாயகர் தயாராம்

கொழும்பு,நவம்பர் 11

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் எதிர்வரும் 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்ட சபாநாயகரை எழுத்து மூலம் கோருவதென கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின்படி இன்று நண்பகல் 12மணிக்கு முன்னர் குறிப்பிட்ட எழுத்து மூல கோரிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்படும். அதையடுத்து அக்கோரிக்கை குறித்து சபாநாயகர் ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை மேற்கொள்வார்.**

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கூட்டிய கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற பெரும்பான்மை உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி கோரிக்கை விடுத்தால் அதுகுறித்து ஆராய்ந்து தீர்மானிப்பேன் என்று சபாநாயகர் கட்சித் தலைவர்களிடம் அறிவித்திருக்கிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., ஈ.பி.டி.பி, தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஐ.தே.க. சார்பில் அமைச்சர்கள் கருஜயசூரிய, டபிள்யூ, ஜே.எம்.லொக்குபண்டார, ஏ.எச்.எம். அஸ்வர், மஹிந்த சமரசிங்க, குழுக்களின் பிரதித்தலைவர் ஹந்திரா ஹென்னதி ஆகியோர் பங்குபற்றினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய நல்லிணக்க அரசு பற்றிப் பேசுவதற்கு பிரதமருக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு



கொழும்பு,நவ.11

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் தான் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்துக் கலந்துரையாட வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமரிடம் நேற்று கையளிக்கப்பட்ட இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான தேசிய நல்லிணக்க அரசொன்றை உருவாகுவதற்கு கடந்த வாரம் என்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக உங்களுடன் கலந்துரையாட நான் விரும்புகிறேன்.

இன்று அல்லது நாளை அல்லது நாளைமறுதினம் இவற்றில் தங்களுக்கு வசதியான தினத்தை எனக்கு அறியத்தரவும். இந்தக் கூட்டத்திற்கு உங்கள் கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அடங்கிய சிறு பேராளர் குழுவொன்றையும் அழைத்து வருவது பொருத்தமாக அமையும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



இந்தச் சந்திப்பின்போது தேசிய நல்லிணக்கம் மீளமைப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அனைத்து தேசிய மற்றும் நாட்டுப்பற்றுள்ள ஆதிக்க சக்திகளின் பாரிய கூட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பில் ஜனாதிபதி விரிவாக கலந்துரையாடவுள்ளார் என்று ஜனாதிபதி செயல

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை எதிர்கொள்வதற்கு இதுவும் நல்ல தருணம்தான்!

### அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,நவ.11

எந்தவொரு நேரத்திலும் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராகவே உள்ளார். தேர்தலுக்கு எந்த ஒரு தருணத்தைப் போல இதுவும் நல்ல தருணமேயாகும்.

- இவ்வாறு அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் பின் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் சமாதான முயற்சிகளை ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் என்பதனை அமைச்சரவையும் அங்கீகரித்துவிட்டது.

இந்த அரசியல் சிக்கல்கள் ஆரம்பமாவதற்கு முன்பே சமாதானப் பேச்சுக்களை நவம்பர் மாத இறுதியில் ஆரம்பிப்பதற்கு புலிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

அதற்கேற்ப பேச்சுக்களுக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு நோர்வே ஏற்பாட்டாளர்கள் இங்கு வரவுள்ளனர்.

ஆனால், சமாதான முயற்சிகளை யார் கையாள்வது என்பதை முடிவு செய்வதே (16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பிரதமர்; நாளை ஜனாதிபதி ஹெல்கிசனுடன் சந்தித்துப் பேச்சு

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று இரவு 10.50 மணிக்கு சென்னையூடாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் யூஎல் 214 விமானத்தில் இலங்கை வந்தடைந்தார்.

அவர் இன்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பார்.

அவரது சந்திப்புக்கள் தொடர்பாக நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் (16ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களத் தரப்புக்களுக்கு இடையே ஐக்கியத்தை கோருகிறது இந்தியா!

புதுடில்லி,நவ.11

இலங்கையின் சிங்களவர் தரப்பில் - அதாவது அரசு, எதிர்க்கட்சித் தரப்புகளிடையே - ஐக்கியம் இருக்குமானால் சமாதான நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும் என்று இந்தியா தெரிவித்திருக்கின்றது.

நாட்டில் தடுமாறும் சமாதான முயற்சிகளின் நலன் கருதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணிலும் நெருங்கிச் செயற்பட முன்வர வேண்டும் என்றும் இந்தியா கோரியிருக்கின்றது (16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு எதிராக தீர்ப்பு

அமெரிக்காவில் இறக்குமதியாகும் எ..கு மீது அந்த நாடு விவிதித்திருப்பது சர்வதேச வர்த்தக விதிமுறைகளுக்கு முரணானது என உலக வர்த்தக அமைப்பு நேற்று திங்கட்கிழமை இரவு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் நான்காவது வினாத்தாள் நாளைய உதயனில் வெளியாகவுள்ளது.

வினாத்தாள்களின் மேலதிக பிரதிகளைப் பெறவிரும்பும் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் வினாத்தாள் ஒன்றுக்கு இரண்டு ரூபா வீதம் செலுத்தி இல. 362 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ('உதயன்' அலுவலகம் அருகில்) 'அருண்ஸ் பிரிண்டேர்ஸ் அன் பப்ளிஷேர்ஸ்' நிறுவனத்தில் பெறலாம்.

## அரசு அமைக்கும் முயற்சியில் பொ.ஐ.மு. ஏழு எம்.பிக்களுடன் இரகசியப் பேச்சு!

யாழ்ப்பாணம்,நவ.11

மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்னமும் தீராத நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி மாற்று அரசொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் (16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியை முன்னெடுக்க அர்ப்பணிப்புடனான செயற்பாடு

### ஐ.தே.க. செயற்குழு தீர்மானம்

கொழும்பு,நவ.11

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும், சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கைகளுக்கு கட்சி ஒருபோதும் இடமளிக்கக்கூடாது எனவும் ஐ.தே.க. செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### மாவீரர் தின நிகழ்வுக்கு முன்னோடியாக

# மூதூர் கிழக்கில் நேற்று வாகனப் பேரணி; ஜனாதிபதிக்கு எதிராகவும் கோஷங்கள்!

விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட மாவீரர் தின நிகழ்வுக்கு முன்னோடியாக நேற்று மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் மாபெரும் வாகனப் பவனி ஒன்று நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மோட்டார் வாகனங்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டன.

மாவீரர் தினம் தொடர்பாக மக்கள் மத்தியில் எழுச்சிபூர்வ உணர்வை உருவாக்கும் வகையிலேயே இந்தப் பேரணி மேற்கொள்ளப்பட்டதாக அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் சம்பூரிலிருந்து காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி கட்டைபறிச்சான் சேனையூர், பாட்டாளிபுரம், தோப்பூர், கிளிவெட்டி ஊடாக வெருகலை சென்றடைந்தது. வாகனப் பவனியில் மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிச் செல்லப்பட்டன.

பேரணியில் சென்றோர் விடுதலைப் புலிகளின் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளைத் தாங்கியவர்களாக சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு எதிரான கோஷங்களை கோஷித்தனர்.

பல ஆயிரக்கணக்கான மக்கள் வீதியின் இருமருங்கிலும் நின்று பேரணியினருக்கு உற்சாகமூட்டும் வகையில் தாமும் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

'ஜனாதிபதியின் சர்வாதிகார நடவடிக்கைகள் ஒழிக', சமாதானத்திற்கு எதிரான சக்திகள் ஒழிக' என்ற கோஷங்களை இருதரப்பினரும் எழுப்பியுள்ளனர்.

### தேர்தல் முஸ்தீபு...?


தென்னிலங்கை வீதியோரக் காட்சி ஒன்று...

# வெளிநாட்டு உதவிகள் தாமதமாக சாத்தியம்

இலங்கைக்கு கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு நிதியுதவிகள் தாமதமடையும் சாத்தியமிருப்பதாக உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹறோல்ட் வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் அது மேலும் சிக்கலை உருவாக்கும். ஆனால், ஏற்கனவே உள்ள செயற்றிட்டங்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாது. இதுபோன்று அரசியல் நெருக்கடி உருவாகும்போது பொருளாதாரத்தில் மேலும் பாதிப்பை ஏற்படுத்துவது வழமை என்றார் அவர். (ஓ-9)

# மணிராசகுளம் முகாமை அகற்ற இராணுவத்தைப் பயன்படுத்துங்கள்!

## அங்கவீன படைவீரர் அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு,நவ.11

தேசிய பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பூரண அதிகாரம் இப்பொழுது ஜனாதிபதியாகிய உங்களிடமே உள்ளது. எனவே, மணிராசகுளத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை அகற்ற இராணுவத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று தேசாபிமான அங்கவீன படைவீரர்களின அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

அந்த அமைப்பின் அமைப்பாளரான பிளைட் லெப்டினன்ட் சாந்த ஜயத்திலக இது தொடர்பாக கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியிருக்கிறார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

புலிகளின் அந்த முகாம் அமைக்கப்பட்டது தொடக்கம் அதை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு தாங்களும் பாதுகாப்பு அமைச்சைக் கோரி வந்தீர்கள். இதுவரை அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இதுபோன்ற முகாம்களை அகற்றுவது உட்பட நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுப்பதற்காகவே நீங்கள் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்று இருக்கின்றீர்கள்.

எனவே, மணிராசகுளம் முகாமை அகற்ற பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# பொலீஸ் உயரதிகாரிகளை அழைத்து ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

## உள்துறை செயலாளர் தலைமையில் குழு அமையலாம்

நாட்டின் சகல பொலீஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளை அழைத்துப் பேசுவதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளார். இது தொடர்பாக பிரதிப் பொலீஸ்மா அதிபர்களை நேற்று அழைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்தினார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த பொலீஸ் பிரிவை தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவரவே ஜனாதிபதி இப்பேச்சுக்களை மேற்கொண்டுவருகிறார். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை இந்த வாரத்தில் அழைத்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென ஜனாதிபதி யானித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் பொலீஸ் ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் பொலீஸ் பிரிவுகளில் இடம்பெறும் குற்றச்செயல்கள், அவை தொடர்பாக பொலீஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய விவரங்களைப் பொலீஸ் ஆலோசனைக் குழு தினமும் பெற்றுக்கொள்ளும். பின்னர் தேவையான நடவடிக்கைகள் குறித்து உத்தரவுகளை பிறப்பிக்கும் எனவும் தெரியவருகிறது.

### படையினரின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட

# அரியாலை, நாவாந்துறை விபத்து வழக்குகள்; குற்றப்பத்திரங்கள் நேற்று நீதிமன்றில் தாக்கல்!

யாழ்ப்பாணம்,நவ.11

அரியாலை, மாம்பழம் சந்தி மற்றும் நாவாந்துறை ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் இடம்பெற்ற - படையினரின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட - விபத்துக்கள் குறித்த வழக்குகளில் நேற்றுக் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரியாலை, மாம்பழம் சந்திக்கு அருகில் இடம்பெற்ற பவள் கவசவாகனம் - ஓட்டோ சம்பந்தப்பட்ட விபத்தில் தொடர்புடைய இராணுவ மற்றும் ஓட்டோ சாரதிகளுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் பொலீஸாரால் நேற்றுக் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கடந்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

இராணுவ வாகன சாரதிக்கு எதிராக கவச வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை மற்றும் ஓட்டோ சாரதிக்கு எதிராக சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களே யாழ். பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளுக்கு சமூகமளிக்காத ஓட்டோச் சாரதியை அடுத்த தவணையின்போது ஆஜர் செய்யுமாறு யாழ் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேசமயம் -

நாவாந்துறைப் பகுதியில் கடந்த மாதம் கடற்படை வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதியான கடற்படைச் சிப்பாய்க்கு எதிரான குற்றப்பத்திரம் பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த மாதம் 7ஆம் திகதி நாவாந்துறையில் இடம்பெற்ற அவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

ஒலியெழுப்பி(கோர்ன்) இல்லாமல் வாகனம் செலுத்தியமை மற்றும் வாகனக் கண்ணாடியில் மழைநீரைத் துடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதனம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் சம்பந்தப்பட்ட வாகன சாரதிக்கு எதிராக யாழ். பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனை அடுத்து இது தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்த யாழ். நீதிமன்ற நீதிவான், சம்பவத்தில் படுகாயமடைந்தவருடைய மருத்துவச் சான்றிதழ் மற்றும் விபத்தில் சேதமான மோட்டார் சைக்கிளைத் திருத்தியமைக்குரிய பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை மன்றில் சமர்ப்பிக்குமாறு பணித்தார்.(ஒ-5)

# கொழும்புத்துறை விபத்தில் சட்டத்தரணி உயிரிழப்பு!

யாழப்பாணம்,நவ.11

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சட்டத்தரணி ஆர்.ஜெயசிங்கம் (வயது-57) என்பவர் உயிரிழந்தார். யாழ்.நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் பணியாற்றிவிட்டு சட்டத்தரணி ஆர். ஜெயசிங்கம் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து சுண்டுக்குளி நோக்கி வந்து கொண்டிருந்த ஹைஏஸ் வானும் எதிர்த் திசையில் சட்டத்தரணி செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன.

சம்பவ இடத்தில் உயிரிழந்த சட்டத்தரணியின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். வானின் சாரதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இன்று அவரைப் பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளனர்.

(ஒ-6-10-15)

# சிறுவனைக் காணவில்லை என பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு

தெல்லிப்பழை,நவ.11

வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பத்து வயதுச் சிறுவன் ஒருவனைக் காணவில்லை என இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளவாலை தமிழ்க் கலவன் பாடசாலை மாணவனான துரைசிங்கம் தஜுசன் என்ற சிறுவனையே கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தந்தையுடன் வயலுக்குச் சென்ற இச்சிறுவன் கயிறு எடுத்து வருவதற்காக வீட்டுக்கு சென்றதாகவும்-

அதன் பின்னர் அச்சிறுவன் இதுவரை வீடு வந்து சேரவில்லை எனவும் - பொலீஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன சமயத்தில் சிறுவன் நீல நிற காற்சட்டையும் பிறவுண் நிற ரீசேட்டும் அணிந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.(ஒ-9-150)

# அமெ. பிரதி அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு,நவ.11

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியப் பகுதிகளுக்குப் பொறுப்பான அமெரிக்க வர்த்தகத் துறை பிரதி உதவி அமைச்சர் மொலிஜே.வில்லியம்ஸ்ன் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இலங்கைக்கு விஜயம் செய்கின்றார்.

இந்த விஜயத்தின்போது இலங்கை அரசுதரப்புப் பிரதிநிதிகளையும், வர்த்தகப் பிரமுகர்களையும், வர்த்தக சபைப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து உரையாடுவார்.

அமெரிக்க - இலங்கை வர்த்தக உறவுகள் குறித்து அறிந்து கொள்ளும் அவர் இலங்கை வர்த்தக சூழ்நிலையை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் குறித்தும் ஆராய்வார்.

# அமெரிக்கக் கடற்படையின் விசேட பயிற்சி இம்மாதம்

கொழும்பு,நவ.11

இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படை அதிகாரிகள் இம்மாதம் விசேட பயிற்சிகளை வழங்கவிருக்கின்றனர்.

தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராணுவப்பயிற்சி ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த இருபது கடற்படையினர் இந்தப் பயிற்சிகளை வழங்குவர். சிறியரக படகுகளைப் பயன்படுத்துதல், முதலுதவி, குறிவைத்துச் சுடுதல் என்பன இந்தப் பயிற்சித் திட்டத்தில் அடங்குகின்றன.

# உதவிப் பொருள்கள் பெற சென்ற மக்கள் ஏமாற்றம்

வலி.வடக்கு,நவ.11

உதவிப் பொருள்களை பெற வந்த அரியாலையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பிற மாவட்டங்களிலிருந்து திரும்பி வந்து அரியாலைப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று உலர் உணவுப் பொருள்கள் அல்லாத பொருள்களை நேற்று விநியோகம் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி -

நேற்று அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 154 குடும்பங்களுக்கு உரிய பொருள்களை வழங்குவதாக கிராம அலுவலர்கள் அறிவித்திருந்தனர்.

காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கிராம அலுவலர்களும் பொதுமக்களும் உதவிப் பொருள்களுக்காக காத்துநின்றனர். ஆனால், அப்பொருள்கள் உரியவர்களால் எடுத்துவந்து விநியோகிக்கப்படவில்லை. மதியம் 12 மணி வரைக்கும் காத்திருந்தும் உதவிப் பொருள்கள் வந்து சேராமையால், பொதுமக்களை கிராம அலுவலர்கள் திருப்பி அனுப்ப நேரிட்டது.

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,நவ.11

இளவாலை கிழக்குப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

நேற்று அதிகாலை அப்பகுதி தோட்டக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட இச்சடலம் தேவசகாயம் பற்றிமா (வயது 38) என்பவருடையது எனத் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் பதில் நீதிவான் வசந்தசேனன் விசாரணை மேற்கொண்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்க பதில் நீதிவான் உத்தரவிட்டார்.(ஓ-9-15-150)

# பொது இடத்தில் முத்தமிட ரஷ்யாவில் தடை வருகிறது!

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 'பொது இடத்தில் முத்தமிடவோ, கட்டிப்பிடிக்கவோ தடைவிதிக்கும் சட்டம் எதிர்வரும் ஜனவரி முதல் அமுலுக்கு வருகின்றது.

நிலத்தடி ரயிலில் காதல் ஜோடிகள் பலரது முன்னிலையில் முத்தம் கொடுப்பதும், அசிங்கமாக நடந்து கொள்வதும் அங்கு தாராளமாகி வருகிறது. இது குறித்து அரசுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதையடுத்து மேற்படி சட்டத்தை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி, நிலத்தடி ரயிலில் காதலர்கள் முத்தமிடமுடியாது. ஏனைய பொது இடங்களிலும் முத்தமிடத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. கணவன், மனைவியை பொது இடத்தில் கட்டிப்பிடிக்கவோ அன்றி முத்தமிடவோ இந்தச் சட்டத்தின் பிரகாரம் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதையும் மீறி - மேற்கண்ட சட்டத்திற்குப்புறம்பாக - நடப்பவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்படுவர்.

இத்தகைய காட்சிகளை பார்த்து சிறுவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்று அரசு அறிவித்துள்ளது.

உலக அரங்கில்

# இந்து பத்திரிகையாளர்களைக் கைது செய்ய உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு!

புதுடில்லி,நவ.11

'இந்து' பத்திரிகை ஆசிரியர், 'முரசொலி' பத்திரிகை ஆசிரியர் மற்றும் நால்வரைக்கைது செய்யும்படி தமிழகச் சட்டமன்றம் விடுத்த உத்தரவிற்கு, உச்ச நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடைவிதித்தது.

இதனால், அவர்களைக் கைது செய்யமுடியாத நிலைக்கு தமிழக அரசு தள்ளப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை விமர்சித்ததற்காக மேற்படி ஆறு பேரையும் கைது செய்யும்படி தமிழக சட்டமன்றம் உத்தரவிட்டது. இதனால் மேற்படி ஆறு பேரும தலைமறைவாகினர். தமிழக சட்டமன்றத்தின் கைது உத்தரவை எதிர்த்து அவர்கள் உச்சநீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுமீதான விசாரணை நேற்று நடந்தது. 'இந்து' பத்திரிகையாளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சட்டமன்றத்திற்கான அதிகார வரம்புகள் குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும். அதுவரை பத்திரிகையாளர்களை கைதுசெய்வதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதனால், மேற்படி பத்திரிகையாளர்களை கைதுசெய்யுமாறு விடுக்கப்பட்ட உத்தரவிற்கு நீதிமன்றம் இடைகால தடை விதித்து உத்தரவிட்டது.

அத்துடன், இந்த உத்தரவை உடனடியாக தமிழகப் பொலீஸாருக்கு தெரியப்படுத்துமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த விடயத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் தெரிந்துகொண்ட பின்னரே வழக்கு மண்டும் விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவை 'இந்து' பத்திரிகை தலைமை ஆசிரியர் என்.ராம் வரவேற்றுள்ளார்.

'உச்சநீதிமன்றத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை வீண்போகவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு எப்படி இருக்கும் என்பது குறித்து கொஞ்சம் கூட சந்தேகம் இருக்கவில்லை. இதனால் நான் பதற்றப்படவுமில்லை - என்று அவர் தெரிவித்துள்ளார்.(ஐ)

# சவூதிக் குண்டுத் தாக்குதலுக்கு உலகநாடுகள் கடும் கண்டனம்

ரியாத்,நவ.11

சவூதி அரேபியத் தலைநகரில் நடந்த குண்டுத் தாக்குதல்களுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அல்கெய்டா இயக்கமே இத்தாக்குதலை நடத்தியுள்ளது என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆறு வளைகுடா நாடுகளைக் கொண்ட கூட்டமைப்பான அரபு லீக்கின் பொதுச் செயலர் இத்தாக்குதல் குறித்துத் தெரிவிக்கையில், மக்களை அச்சுறுத்தி, கொன்று குவிக்கவே இத்தகைய பயங்கரவாதக குற்றச்செயல்கள் நடத்தப்படுகின்றன - என்று கூறியுள்ளார்.

இத்தாக்குதலை அடுத்து பயங்கரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் அரபு லீக் முழு மூச்சுடன் ஈடுபடப்போவதாகவும் அவர் சூளுரைத்தார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கூறுகையில்:-

பயங்கரவாதத்தின் மற்றோர் அரங்கேற்றமே சவூதியில் நடந்த குண்டுத் தாக்குதல்.

குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்ட விதத்தைப் பார்க்கும்போது பயங்கரவாதிகள் நெறிகளோ அன்றிக் கோட்பாடுகளோ கொண்டவர்கள் அல்லர் என்பது தெளிவாகிறது - என்று தெரிவித்தார்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்:-

பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து எந்த நாடும் தப்பப்போவதில்லை என்பதையே இந்தத் தாக்குதல் எடுத்துக்காட்டுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

குடியிருப்புப்பகுதி தாக்குதலுக்காக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால், தாக்குதலை அல்கெய்டாவினரே செய்திருக்கக்கூடிய சான்றுகள் உள்ளன - என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குண்டுத் தாக்குதல் நடைபெறுவதற்கு முதல்நாளே, சவூதி அரேபியாவிலுள்ள தனது தூதரகத்தை அமெரிக்கா மூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானும் இத்தாக்குதலைக் கண்டித்திருக்கிறார்.



சவூதியில் நேற்றுமுன்தினம் மக்கள் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் லெபனானைச் சேர்ந்த கணவன் - மனைவி இருவரும் காயமடைந்தனர். தலைநகர் ரியாத்தில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் தனது மனைவியை காயங்களையும் பொருட்படுத்தாமல் வந்து பார்வையிடும் நெஹமே முஷண்டவ்.

# ஈராக் இடைக்கால நிர்வாகக் குழுவை கலைத்துவிட அமெரிக்கா பரிசீலனை

பக்தாத்,நவ.11

ஈராக்கின் இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழுவை அமெரிக்கா கலைத்துவிட பரிசீலனை செய்கிறது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாக ஆட்சிக் குழு இதுவரை எதுவித முக்கிய தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியே அதனைக் கலைத்துவிட அமெரிக்கா பரிசீலனை செய்கிறது.

அமெரிக்காவின் இந்த முடிவிற்கு இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழு அதிருப்தி தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாகக் குழுவைக கலைத்துவிட்டு ஈராக்கை ஆட்சிசெய்வதற்கு மாற்றுத் திட்டமொன்றையும் அமெரிக்கா பரிசீலித்து வருகிறது.

பிரான்ஸின் பகுதிகளிலுள்ள ஆட்சி அமைப்பைப்போன்று, ஈராக்கிலும் ஆட்சி அமைப்பை உருவாக்குவது குறித்தே அமெரிக்கா பரிசீலிக்கிறது.

ஈராக்கிலுள்ள சகல பிரிவினரையும் உள்ளடக்கி புதிய ஆட்சி அமைப்பை உருவாக்குவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது.

இதுகுறித்த தகவல்கள் வாஷிங்ரன் போஸ் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

"இடைக்கால நிர்வாக ஆட்சிக் குழு இதுவரை கூட்டுத் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. தனித்தனியான திட்டங்கள் குறித்தே ஆட்சிக்குழுவிலுள்ள ஒவ்வொருவரும் கவனம் செலுத்திவருகின்றனர்" - என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கா நியமித்த இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழுவே தற்போது ஈராக்கை ஆட்சிசெய்கிறது. இந்தக் குழு இதுவரை அமெரிக்காவுக்கு ஆதரவான தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையிலேயே அதனைக் கலைத்துவிட அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது.

அமெரிக்காவின் இந்த முடிவிற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்படும் என நம்பப்படுகிறது. அத்துடன், இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழு கலைக்கப்படுமாயின் அது அமெரிக்கப்படையினருக்கு எதிரான தாக்குதலை மேலும் வலுப்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் குசைனுக்கு இது ஆதரவாக அமைந்துவிடலாம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதற்கிடையே -

ஈராக்கில் புதிய ஆட்சி அமைப்பை விரைவில் ஏற்படுத்திவிட்டு, அங்கிருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் பெற திட்டமிடப்பட்டிருப்பதாகவும் 'வாஷிங்ரன் போஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாளாந்தம் நடக்கும் தாக்குதல்களால் அமெரிக்கப்படையினருக்கு இழப்பு அதிகமாகிக்கொண்டே போகிறது. இதன் காரணமாகவே படையினரை அங்கிருந்து வாபஸ் பெறுவது குறித்து அமெரிக்க நிர்வாகம் பரிசீலித்து வருகின்றது.

(ஐ)

# ஜப்பானிய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சி பெரும்பான்மை இழந்தது!

ஜப்பானிய நாடாளுமன்ற தேர்தலில் ஆளுங்கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது. இதனால் பிரதமர் ஜுனிசிரோ கொய்சுமி கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த ஆசனங்களை விட பன்னிரண்டு ஆசனங்களை பிரதமரின் கட்சி இழந்திருக்கிறது. எதிர்க்கட்சி முன்னர் இருந்ததிலும் பார்க்க முப்பது ஆசனங்களை மேலதிகமாகப் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இன்னமும் முழுமையாக வெளியிடப்படவில்லை. என்னும், பிரதமரின் கட்சிக்கு மேலும் ஆசனங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாக்களிப்பு மந்தமாகவே இருந்தது என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2001 இல் பதவிக்கு வந்த பிரதமர் கொய்சுமி பொருளாதார சீர்திருத்தங்களை அதிரடியாக அறிவித்தார். அதன் பலாபலன்களை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன என்று ஊடகங்கள் விமர்சிததுள்ளன.

இனிவரும் காலங்களில் பிரதமர் பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொள்ள நேரிடலாம் என்று அவை தெரிவித்துள்ளன.

# இலவச பணத்திற்காக முண்டியடிப்பு; சூடானில் 31 பேர் மூச்சுத் திணறிப் பலி!

இலவசமாக வழங்கப்படும் பணத்தைப் பெறுவதற்காக முண்டியடித்த 31 பேர் சூடானில் மூச்சுத் திணறிப் பரிதாபமாக இறந்தனர்; 46 பேர் காயமடைந்தனர்.

சூடானில் வேர்ட்டான் நகரிலுள்ள தொழில் அதிபர் ஒருவர் அங்குள்ள ஏழை மக்களுக்கு இலவசமாகப் பணத்தை வழங்க முன்வந்தார். அதற்கான அறிவிப்பையும் அவர் வெளியிட்டார்.

ரமழான் நோன்பை முன்னிட்டு ஏழைகளுக்கு தர்மம் செய்யும் நோக்குடனேயே அவர் பணத்தை வழங்கினார்.

இலவசமாக வழங்கப்பட்ட பணத்தைவாங்க அங்கு நூற்றுக்கணக்கானோர் குழுமினர். குழுமிய அனைவரும் வரிசையில் நிறுத்தப்பட்டனர்.

பணத்தை தொழிலதிபர் வழங்க ஆரம்பித்ததும் வரிசையில் நின்றோர் முண்டியடித்து வரிசையைக் குழப்பினர். இதனால் அங்கு சன நெரிசல் ஏற்பட்டது. நெரிசலில் சிக்கி 31 பேர் மூச்சுத் திணறி பரிதாபமாக இறந்தனர். இறந்தவர்களில் பத்து குழந்தைகளும் 16 பெண்களும் உள்ளடங்குவர்.

சூடானிய வழக்கப்படி நோன்புப் பெருநாளில் தொழில் அதிபர்கள் ஏழைகளுக்கு தர்மம் செய்வார்கள். ஆனால குறிப்பிட்ட சில தொழிலதிபர்கள் மாத்திரமே தர்மமாக பணத்தை வழங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# எய்ட்ஸ் நோய்க்கு எதிராக சீனா மாபெரும் பிரசாரம்!

எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்கு எதிரான மாபெரும் பிரசாரம் சீனாவில் ஆரம்பமாகியுள்ளது.

தலைநகர் பெய்ஜிங்கில் இது குறித்து பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கூட்டங்களில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் உரையாற்றுவார்.

எதிர்வரும் முதலாம் திகதி எய்ட்ஸ் நோயாளர்கள் தினமாகும். அன்றைய தினத்தைக் கருத்திற்கொண்டே சீனாவில் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான பிரசாரம் ஆரம்பமாகியுள்ளது.

சீனாவில் தற்போது எட்டு லட்சம் எயிட்ஸ் நோயாளர்கள் உள்ளனர். இதனால அங்கு எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்படி பிரசாரம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் பிரசாரத்தை சீனாவில் சி.ஏ.ஐ. நிறுவனம் முன்னெடுத்துள்ளது. தற்போது நடைபெறும் மாதத்தை எய்ட்ஸ் விழிப்புணர்வு மாதமாக அந்த நிறுவனம் பிரகடனம் செய்துள்ளது.

சீனாவில் எட்டு லட்சம் எய்ட்ஸ் நோயாளர்கள் உள்ளனர் என்று அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவித்தாலும், இந்த எண்ணிக்கையைவிட அதிகமான நோயாளிகள் அங்கு இருக்கலாம் என்று சர்வதேச நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொலம்பிய பாதுகாப்பு அமைச்சர் திடீரென ராஜினாமாச் செய்தார்

கொலம்பிய பாதுகாப்பு அமைச்சர் லூசியா ரமிரேஸ் நேற்றுமுன்தினம் திடீரென இராஜினாமாச் செய்தார். இவரது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி அல்வரோ யூரிப் ஏற்றுக்கொண்டார்.

புதிய பாதுகாப்பு அமைச்சராக காப்புறுதி நிறுவனமொன்றின் உரிமையாளரான ஷேகுரோஸ் டி லீமா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் ஒருவருடம் பதவி வகித்த லூசியா ரமிரேஸ் தனது இராஜினாமாவுக்கு காரணம் எதனையும் குறிப்பிடவில்லை.

பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட மூன்று தொன் போதைப் பொருள்கள் கடந்த மாதம் திடீரெனக் காணாமற்போயின. இது குறித்த விசாரணைகளை தற்போது செனட் சபை நடத்திவருகிறது. லூசியா ரமிரேஸும் இந்த விசாரணையில் சாட்சியம் அளித்து வருகிறார். இந்நிலையிலேயே அவர் பதவி விலகியுள்ளார்.

'போதைப் பொருள்கள் குறித்த தகவல்கள் என்னிடம் மறைக்கப்பட்டிருந்தன' - என்று அவர் விசாரணைகளில் கூறியுள்ளார்.

# தம்மையே பாதுகாக்க முடியாத தமிழ்க்குழுக்கள் மக்களின் உரிமைகளை எப்படி பெற்றுத் தருவர்?

## வலி.கிழக்கு அரசியல்துறை பொறுப்பாளர் உரை

வலி.கிழக்குநவ.11

தங்களுக்குத்தாங்களே பாதுகாத்துக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கும் தமிழ் ஆயுதக் குழுக்களால மக்களின் அரசியல் உரிமையை எவ்வாறு பெற்றுத்தரமுடியும்?

- இப்படிக் கேள்வியெழுப்பினார் விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சியாழவன்.

கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்கத்தின் 83 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் க.அன்னலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின் நாம் யாழ்ப்பாணம் வந்தோம். இங்குநாம் எந்தவோர் ஆயுதமுமின்றித் திரிகின்றோம் என்றால், அதற்குக காரணம் மக்கள் பலமும் அரசியல் பலமும்தான். இது சர்வதேசத்திற்கே நன்கு தெரியும்.

ஆனால், மக்களுக்கு ஏதோ பெற்றுக்கொடுப்பது போல தமிழ்க்குழுக்கள் அரச படைகளுடன் இணைந்து நிற்கின்றன. தமது முகாம்களுக்கு பாதுகாப்பாக அரச படையினரை வைத்துக்கொண்டுள்ளன.

அவர்கள் நிலையே அப்படி இருக்கையில் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் அவர்களால் பெற்றுக்கொடுக்க முடியுமா? அவர்களால் அந்த அரசுடன் சேர்ந்து தலையாட்டிக்கொள்ள முடியுமே தவிர வேறுஎன்ன செய்யமுடியும்?

ஆனால் எமது விடுதலைப் போராட்டம் அப்படிப்பட்ட ஒன்றல்ல. எமது தலைவர் எந்தவிடயத்திலும் தூரநோக்கோடுதான் சிந்திப்பார்.

மக்கள் இருக்கும் வரையும் புலிகள் இருப்பார்கள். இது மக்களுக்கான போராட்டம்; நாம் கேட்பது எமது மண்ணை.

பேச்சுமூலம் இடைக்கால் சட்டமைப்பு கிடைக்காவிடின் பிரிந்துபோவதற்கு எமக்கு சர்வதேசத்தின் முழு ஆதரவும் கிடைக்கும்.

இது அரசுக்கும் தெரியும். அதனால், இடைக்கால நிர்வாகத்தை அரசு வழங்கத்தான் வேண்டும்.

நாம் ஒன்றைமட்டும் கூறுகிறாம். நாம் சமாதானத்தை - படையினரின் சீண்டுதலுக்கு மத்தியிலும் - சகித்துக்கொண்டு முன்னெடுத்துவருகின்றோம். நாமாக ஒருபோதும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டோம். யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதை முடித்துவைப்பதும் புலிகளின் கடமையாகும்.

எனவே, தீயசக்திகளின் செயலுக்கு இடம்கொடுக்காது விழிப்புடன் இருக்குமாறு அவர் தெரிவித்தார். (ம-180)

## பெருவிரல் துண்டிப்பு

தென்மராட்சி,நவ.11

தச்சுவேலை இயந்திரத்தில் பலகை அரிவு வேலையில் ஈடுபட்ட இளைஞரின் விரல் இயந்திரத்தினுள் அகப்பட்டதால் பெருவிரல் துண்டிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை தாவளை இயற்றாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் கஜேந்திரன் (வயது-20) என்பவரின் இடதுகை பெருவிரல் துண்டிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஐ-117)

## கூட்டம்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு குறித்த கூட்டம் இன்று பி.ப. 2.00 மணிக்கு யாழ். செயலகத்தில் இயங்கும் இந்து கலாசார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. கலாசார அலுவலர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# கலைப்பேரரசு நினைவாக நிதியம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,நவ.11

கலைப்பேரரசு அமரர் ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த நிதியம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

அமரரின் ஞாபகார்த்த ஒன்றுகூடல் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் இளைப்பாறிய பிரதி அதிபர் த.சிவராமலிங்கப்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி நிதியம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வருடத்திற்கு ஒருமுறை சிறந்த நாடகத்துக்கோ அல்லது சிறந்ததொரு நாடக நூலுக்கோ அல்லது சிறந்த நாடக நடிகருக்கோ 'ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருது' வழங்கப்படவுள்ளது.

இதற்கென 5 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கலாநிதி க.குணராஜா, அறுதிருமுருகன், கி.கிருபாஸந்தா, பொபாலகுமார், சி.தயாபரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ-10)

## கலந்துரையாடல்

கரவெட்டி பிரதேச சனசமூக நிலையங்களின் தலைவர்களுக்கு சமூக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் கரவெட்டி பிரதேசத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களின தலைவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கரவெட்டி பிரதேச சனசமூக உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ம-7)

## இராணுவப் பொலிஸாரை விசர்நாய் கடித்தது

கடமையிலிருந்த இராணுவப் பொலீஸார் இருவர் விசர்நாயினால் கடியுண்ட சம்பவம் அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்றது. பிள்யூ.ஏ.ஜெயரத்ன (வயது-43), அபேசிறிவர்த்தன (வயது-20) ஆகிய இருவருமே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர். விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்காக இந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (எ-117)


## சுவிஸ் PERLYA CARGO SERVICES

மிகக்குறைவான கட்டணத்தில்



சுவிஸிலிருந்து கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்துக்கு—

CHF 100 மட்டுமே!

மாதாமாதும் பொதிகளை அனுப்பி (80X60X60)

வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.

Limmatstrasse 213
8005 Zurich
Tel: 01/4407115
Fax:01/4407117

விசேட விலைக் கழிவில்.....
சுவிஸ் - கொழும்பு சென்று வர
விமான டிக்கட் Including 35 Kg
CHF 1140 மட்டுமே! Baggage


## மரண அறிவித்தல்

### இராமநாதன் ஜெயசிங்கம்

(சட்டத்தரணி)

பாண்டியன்தாழ்வு, சந்தனமாதா வீதியைச் சேர்ந்தவரான சட்டத்தரணி இராமநாதன் ஜெயசிங்கம் அவர்கள் நேற்று (10.11.2003) திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, சந்தனமாதா வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (24601) (33-11-16)

தகவல்:
திருமதி ஜெயசிங்கம்
(மனைவி).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது காரியாலய ஊழியரும் சிறந்த சமூக சேவையாளருமான

**திரு. சி.கி.நவரட்ணம்**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

(24600)(33-11-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அச்சுவேலி வடக்கு J/285 கி.சே.உத்தியோகத்தர்

**திரு. இராமன் யோகராசா**

அவர்கள் கடந்த 31.10.2003 அன்று மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நற்பும் சிறப்பும் மக்கள் சேவை உள்ளமும் கொண்ட இவருக்கு இப்பதவியை வழங்கியதற்காக நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
சி. துரைத்தினம் (பேபி)
குடும்பத்தினர்.

விஸ்ணு வீதி,
அச்சுவேலி தெற்கு. (24601)(33-11-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடலியடைப்பு அரசடி வீதியைச் சேர்ந்த

**திரு. செல்வரத்தினம் செல்வராசா**


அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவரின் சமூக நற்பணிகள் தொடர பாரத்தனை ஐயப்ப சுவாமிகளின் அருளாசி வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய பரிபாலன சபை,
வடலியடைப்பு நலன்புரி கல்வி நிலைய மாணவர்கள்,
ஆசிரியர், நிர்வாகிகள்.

(24597)(34)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04
05
1925



உதிர்வு
14
11
2000

## சி.க.மயில்வாகனம்

(முன்னாள் நகரபிதா, சாவகச்சேரி நகரசபை, சமாதான நீதிவான்)

திதி - 11-11-2003

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறாதையா உங்கள் பிரிவுத் துயர்!
என்றும் உங்கள் நினைவுகளுடன்....

- குடும்பத்தினர்.

(சி-31230) (30-11-16)

உதயன்

## சமாதானம் நீடிக்குமா?

"புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊசலாடுகின்றது" - எனக் கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டுமல்ல, தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலமே கேள்விக் குறியாகியிருக்கின்றது என்பதுதான் இப்போதைய நிலைமை.

"சமாதான நடவடிக்கைகளை அரசு முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு, மக்கள் தொடர்பாடல் அமைச்சு என்பன முக்கியமானவை. இந்த அமைச்சுகளும் சமாதான நடவடிக்கைச் செயற்பாடுகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. இந்த அமைச்சுப் பொறுப்புக்களைக் கைவிட்டுவிட்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாது" - இப்படி அரசு தெரிவித்துவிட்டது.

"இரட்டைத் தலைமைகளின் இழுபறிக்கு நடுவே சமாதான முன்னெடுப்புக்களைத் தொடரமுடியாது. ஆட்சி ஒருபுறமும் நிறைவேற்று அதிகாரம் ஒருபுறமும் சிக்கித் தடுமாறும்போது நாட்டில் சமாதானம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பை ஒன்றில் அரசிடம் முழுமையாக ஒப்படைக்கவேண்டும். அல்லது ஜனாதிபதி தானே பொறுப்பேற்கவேண்டும். ஜனாதிபதியிடம் முழுமையாக ஒப்படைக்க நாம் தயார். அதற்கு முழு ஆதரவு வழங்கவும் நாம் தயார்" - இப்படி வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தமது இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எடுத்துரைக்கும்படி இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளுக்கு எடுத்துரைத்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அவரது அறிவித்தலின்படி - அரசுத் தரப்பின் நிலைப்பாட்டின்படி - சமாதான நடவடிக்கை விளையாட்டில் பந்து இப்போது ஜனாதிபதியின் களத்தில்.

அரசு ஜனாதிபதியின் களத்துக்குள் தள்ளியுள்ள பந்தை ஜனாதிபதி எப்படி விளையாடுகின்றார் என்பது ஒருபுறமிருக்க -

ஜனாதிபதி இந்த நடவடிக்கைச் செயற்பாட்டுக்குள் வந்தால் - அரசின் அழைப்பை கவனத்தில் எடுத்துத் தாமே சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜனாதிபதி முன்வந்தால் - புலிகள் அதனை ஏற்றுக் கொண்டு சமாதான முயற்சிகளைத் தொடர இணங்குவார்களா என்ற கேள்வி எழுகின்றது.

1994முதல் குறுகியகாலம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டவர்கள்தான் விடுதலைப் புலிகள்.

அந்தச் சமாதான முயற்சிகளின் போது ஜனாதிபதி நடந்துகொண்ட விதத்தை அரசியல் வஞ்சகம் (Politics of Duplicity) என்ற பெயரில் ஆவணப்படுத்தியவர்கள் புலிகள்.

1994 முதல் 2001 வரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு நடத்திய ஆட்சியை தமிழரின் சமகால அரசியலில் 'இருண்டகாலம்' என வர்ணித்தவர்கள் புலிகள்.

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில்கூட 'போரா?, சமாதானமா? எது தேவை?' என்று தீர்மானிக்கும்படி சிங்கள வாக்காளர்களைப் பார்த்து அழைப்பு விடுத்த புலிகள், சமாதானம் தேவை என்றால் பிரதமர் ரணிலின் தலைமைக்கும், யுத்தம் தொடர்வதுதான் உங்கள் விருப்பம் என்றால் சந்திரிகாவின் அரசுக்கும் வாக்களியுங்கள் என்று சூசகமாகச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

அதுமட்டுமல்ல, இதுவரை நடந்து முடிந்த ஒவ்வொரு சுற்றுசமாதானப் பேச்சுக்களின் முடிவிலும் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்புகளில் 'நம்பிக்கைக் குரியவரல்லர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க' என்ற தமது நிலைப்பாட்டை அவ்வப்போது வலியுறுத்தி வந்தவர்கள் - வெளிப்படுத்தி வந்தவர்கள் - விடுதலைப் புலிகள்.

ஜனாதிபதி குறித்தும் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணி குறித்தும் முன்னரே கசப்புமிக்க அனுபவங்களைப் பட்டுணர்ந்துள்ள விடுதலைப் புலிகள், அவரது தலைமையின் கீழ் - அவரது வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் ஆலோசகர் அனுரா பண்டார நாயக்க போன்றோர் தொடர்புபடுகின்ற - சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றி, அவர்களுடன் ஒரு மேசையில் அமர்ந்திருந்து உரையாட இணங்குவார்கள் என்பது பெரும்பாலும் சாத்தியமற்றது.

எனினும், தெற்கில் இப்போது குழம்பியுள்ள குட்டை தெளிந்து, ஒரு தெளிவான நிலைப்பாடு மேலெழும்பும் வரை புலிகள் அலட்டிக்கொள்ளமாட்டார்கள் என்பது நிச்சயம். அமைதி காத்து, பொறுமை பேணி, நிலைமை சீரடையும்வரை ஆற, அமர அவர்கள் காத்திருப்பார்கள் என உறுதியாக நம்பலாம்.

இன்னும் சுமார் இரண்டுவார காலத்தில் மாவீரர் தினம் வருகின்றது. வருடாவருடம் அந்நிகழ்வை ஒட்டி தமது அரசியல் நிலைப்பாட்டைத் தலைவர் பிரபாகரன் தெளிவாக விவரிப்பது வழமை.

இம்முறையும் தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பாகப் புலிகளின் திட்டவட்டமான நிலைப்பாட்டை அறிய அத்தினம் வரை காத்திருக்க வேண்டி ஏற்படலாம்.

## காலத்தின் பதிவு



தேச நிர்மாணத்துக்காக.... படம்: பிரேம்

# வலைபின்னுவதற்கு நூல்கள் இல்லை; வடகடல் நிறுவனம் மூடப்படும் அபாயம்

யாழ்ப்பாணம்,நவ.11

வலை பின்னுவதற்கான நூல்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாமையினால் குருநகர் (சீநோர்) வடகடல் நிறுவனம் மூடப்படும் நிலையில் உள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

தற்போது அந்த நிறுவனத்தில் நூல் திரித்தல், வலை பின்னுதல் போன்ற செயற்பாடுகள் தற்காலிகமாக இடம்பெற்று வருகின்றன.

தொழிற்சாலையில் ஆறு இயந்திரங்கள் இருக்கின்ற போதிலும் போதிய அளவு நூல் இல்லாமையினால் இரண்டு இயந்திரங்களில் மட்டுமே அண்மைக்காலமாக வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

சீநோர் தொழிற்சாலை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின்கீழ் இந்த ஆண்டு ஜூன் மாதம் கொண்டு வரப்பட்டது. நிறுவனத்தினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 250 கிலோ நூல் கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு இயந்திரங்கள் மூலம் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

கடந்த வாரம் அந்த நூலும் முடிவடைந்தது. இதனால் கடந்த ஒரு வாரமாக அங்கு எந்தப் பணிகளும் இடம்பெறவில்லை.

"தற்போது நிறுவனத்தில் உள்ள ஆறு இயந்திரங்களில் வலை உற்பத்தியினைச் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு 1000 கிலோ நூல் தேவை. ஆனால், அனைத்து நூல்களும் தீர்ந்துவிட்ட நிலையில் எந்த உற்பத்தியுமின்றி நிறுவனம் முடங்கிக் கிடக்கிறது. இந்த நிலை தொடர்ந்தால் நிறுவனத்தை மூட வேண்டி வரலாம்" - என்று நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டிருந்த வலைபின்னும் பகுதி நேற்று ஊழியர்களின் முயற்சியினால் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்தது. 1990 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டுக் கிடந்த தும்புகளைக் கொண்டு நூல் திரிந்து அதன் மூலம் வலைபின்னும் முயற்சியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.(ம-7)

## வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.11

இருளில் மூழ்கியுள்ள யாழ்.குடாநாட்டு வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக வீதிகளில் பொருத்தப்படவேண்டிய மின்விளக்குகளின் விவரங்களைச் சேகரிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் து.விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களையும் பணித்துள்ளார்.

குடாநாட்டில் 24 மணிநேர மின்சார விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வீதிகளுக்கு விளக்குகள் பொருத்த வேண்டும் என்ற கோரிக்கை பலதரப்புகளாலும் வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால், அதற்கான நிதிவசதி தம்மிடம் இல்லை என்று மின்சாரசபை தெரிவித்தது.

கடந்த சனிக்கிழமை யாழ்.செயலகத்தில் நடந்த உள்ளூராட்சி மன்ற அலுவலர்களுக்கான கலந்துரையாடலில் இந்த விடயம் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது.

வீதிகள் இருளில் மூழ்கியுள்ளதனால் விபத்துக்கள் ஏற்படுவதும் தற்போது இரவில் சனநடமாட்டம் அதிகரித்திருப்பதும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து வீதிவிளக்குகளைப் பொருத்துவதற்கு வேண்டிய நிதி உதவிகளை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மூலம் ஒதுக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் து.விஜயலட்சுமி தெரிவித்தார். அதற்கு முன்னேற்பாடாக தேவையான மின்விளக்குகளின் விவரங்களைச் சேகரிக்குமாறும் அவர் பணித்துள்ளார். (ம-6)

### நாளை

ஐப்பசி 26
புதன்கிழமை
(12.11.2003)
திதி : திருதியை
பிற்பகல் 1.10 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முன்னிரவு 11.37 வரை
சுபநேரம்: 4.36 - 6.06
ராகுகாலம்: 12.06 - 1.36
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு பெண்ணுக்காவது கோபம் ஏற்படுத்த முடியாதவன் வாழ்க்கையில் தோல்வியுற்றவனாவான்.

## தேசிய சேமிப்பு வங்கியில் முக்கிய வைப்புகளுக்கு வட்டி வீதம் குறைப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

தேசிய சேமிப்பு வங்கி முக்கிய சேமிப்புகளுக்குரிய வட்டி வீதங்களைக் குறைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நிலையான சேமிப்பு கணக்கு, முதியோர் சேமிப்புக்கணக்கு மற்றும் சிறுவர் சேமிப்பு கணக்கு ஆகிய வைப்புக்களுக்கான வட்டி வீதங்களே குறைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் வருடமொன்றிற்கு 7.5வீதமாக இருந்த நிலையான சேமிப்புக்கான வட்டி வீதம் 7வீதமாகவும், மாதமொன்றிற்கு 7.25 வீதமாக இருந்த இக்கணக்கிற்கான வட்டி வீதம் 6.75வீதமாகவும் -

மாதாந்தம் 8.25 வீதமாக இருந்த முதியோர் சேமிப்புக் கணக்கிற்கான வட்டி வீதம் 7.75 வீதமாகவும் -

மாதாந்தம் 6.5 வீதமாக இருந்த சிறுவர் சேமிப்புக்கணக்கிற்கான வட்டிவீதம் 6வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கைகள் சகல வங்கிக் கிளைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-5)

## 'சிசு உதான' பொது அறிவுப் போட்டி வலய மட்டத்தில் நாளை ஆரம்பம்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே மக்கள் வங்கியினால் நடத்தப்பட்டுவரும் 'சிசு உதான' பொது அறிவுப் போட்டியின் வலயமட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் விவரமும் போட்டி நடைபெறும் இடங்களும் மக்கள் வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

★ 12 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மக்கள் வங்கி, பிராந்திய அலுவலகத்தில் நடைபெறும் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரியும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியும் பங்குபற்றும்.

★ 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் போட்டியில் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம் ஆகியனவும் -

அன்றுமாலை 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டு.இந்துக்கல்லூரி ஆகியனவும் பங்குபற்றுகின்றன.

★ 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள போட்டியில் வட இந்மகளிர் கல்லூரி மற்றும் வடமத்திய மகளிர் கல்லூரி ஆகியன பங்குபற்றவுள்ளன.

போட்டி ஆரம்பமாவதற்கு 20 நிமிடத்திற்கு முன்னர் போட்டியாளர்கள் குறித்த மண்டபத்திற்கு வருகைதரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்


### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில இருந்து கிழக்குப் பக்கமாக 500 யார் தொலைவில் குறுக்கு வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செவ்வந்தி, இல.07, நவீன சந்தை, சாவகச்சேரி. (C/31224)

### விற்பனைக்கு

வெள்ளவத்தையில் 1110 சதுர அடிக்குக் கூடிய 2 படுக்கையறைகளைக் கொண்ட தொடர்மாடித் தொகுதி வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 173, Stanley Road, Jaffna. T.P.021-2222310, 021-2226256. (24577)

### தவறிவிட்டது

கலைப்புலவர் வீதி தண்டவாளப் பகுதியில் இருந்து கந்தர்மடம் போகும் வழியில் கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திரு. மூர்த்தி. T.P. 021-2226954. (24570)

இல.29, அரசடி வீதி, நல்லூரைச சேர்ந்த இரத்தினசிங்கம் ஜெகதீஸ்வரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அ.அ.(இல. 673001300V), விசேட அ.அ., இ.போ.ச. அ.அட்டை என்பன கல்வியங்காட்டுக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் 08.11.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ் நிலையத்தில் அல்லது கோண்டாவில்சாலையில ஒப்படைத்துதவவும். (24587)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பிரான்ஸ் நாட்டில் வசிக்கும், 1966 ஆம் ஆண்டு பிறந்த, 7 இல் செவ்வாயுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் சுயவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல. 2090, மே/பா உதயன். (24537)

### திருமண சேவை

1961, உத்தரட்டாதி, செவ்வாய் 4, U.K. Engineerக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். விவாகரத்துப் பெற்றவர்களும விண்ணப்பிக்கலாம். சீதனம் முக்கியமில்லை. தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24580)

1971இல் பிறந்த, பூரட்டாதி நட்சத்திரம, 2இல் செவ்வாய் B.Sc. விரிவுரையாளருக்கு பட்டதாரிதரத்தில் உத்தியோக, சைவ மணமகன் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24460)

### சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
(24381) (12-15) தெஹிவளை.

### இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31108) (15-34)

### ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்.கிளை

**ஏல விற்பனை அறிவித்தல்**


ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் **31.08.2002** இற்கு முன்னர் அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத அடகு நகைகள் **15.11.2003** சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- முகாமையாளர்.

(C/31225)(35-12-15)


## 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 06 - 1973



மறைவு 11 - 11 - 1993

**சின்னப்பு றதீஸ்வரன்**

நிழல் தருவாய் நீ! என நினைத்திருந்த வேளையில்
துயர் தந்து தூர விலகினியோ நீ!

என்றும் உன் நினைவுகளுடன்:
அம்மா - பூபதி,
சகோதரர்கள் - ஞானேஸ்வரன், கதிர்மலை, விக்கினேஸ்வரி,
மச்சான், மருமக்கள்.

*பாரதி வீதி,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (24986)(34-12-15)

# துறைசார் கலைஞர்களை கௌரவிப்பது நமது கடமை

## கலைஞர் மெற்றாஸ்மயில் தெரிவிப்பு

மண்டைதீவு,நவ.11

கிராமியக் கலைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதுடன், துறைசார்ந்த கலைஞர்களைக் கௌரவிப்பதும் கலையுலகின் கடமையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளர் செ.மெற்றாஸ்மயில்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட அலுவலக திறப்புவிழாவில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கத்தோடும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காகவும் இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் பத்தாண்டுகளாக கலையுலகத்திற்கு பல சேவைகளைச் செய்துள்ளோம்.

அந்தவகையில், இன்று மூத்த கலைஞர்கள் நால்வரின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

கலைக்காகவே தம்மை அர்ப்பணித்த இந்தக் கலைஞர்களை நினைவுகூருவது எமது கடமையாகும்.

பாரம்பரிய கூத்துக்களை வளர்த்தெடுப்பதற்காக எமது கழகத்தினால் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் சிறந்த கலைஞர்களை இனங்காணவும் அவர்களுக்கான உதவிகளை வழங்கவும் உதவும் - என்றார். (எ-88)

### புதிய அலுவலகம் திறந்து வைப்பு

மண்டைதீவு,நவ.11

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் புதிய அலுவலகம் யாழ். பிறவுண் வீதியில் அண்மையில சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கழகத்தின் தலைவர் டாக்டர் வை.தியாகராஜா நாடாவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார். அதற்கு முன்னதாக நிகழ்வில் மங்கள விளக்கை ஓய்வுபெற்ற அதிபர் சி.தார்சீசியஸ் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மூத்த கலைஞர்களான நடிகமணி வி.வி.வைரமுத்து, அண்ணாவியர்களான பூந்தான் யோசேப், சி.கணபதிப்பிள்ளை, வேலு சின்னமணி ஆகியோரின உருவப்படங்கள் திரைநீக்கம் செய்துவைககப்பட்டன. உருவப்படங்களை கழகத்தின் செயலாளர் செ.மெற்றாஸ்மயில் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தீவகக் கல்வி வலயத்தின் நிதி உதவியாளர் பொன்.தர்மேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரைகளும் இடம்பெற்றன. (எ-10-88)

### பஸ்களை சேதமாக்கும் மரக் கிளைகள்

கைதடி,நவ.11

கைதடிப் பகுதி வீதியில் வளர்ந்திருக்கும் பாரிய மரக்கிளைகளால் பஸ் சேவையை சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கைதடிக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பஸ், கைதடி வடக்கு வரை சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு மேற்படி சேவை நடைபெறும் கைதடி வடக்கு வீதியின் இருமருங்கிலும் நிற்கும் மரங்களின் கிளைகள் பஸ்களின் மேல்பகுதியை சேதமாக்கி வருவதாகவும் கூறப்பட்டது. (எ-75)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.11

நல்லூர் ஞானோதய வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் வண. பிதா கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்விக் கழகப் பொறுப்பாளர் கைகவியன்பன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-180)


### யாழ் - கொழும்பு பஸ் சேவை

குறைந்த கட்டணத்திற்கு ஆசனம் பதிவுசெய்யலாம். 900/= மட்டுமே!
உரிமையாளர்: இ.சிறிதரன்
வேணுகா
தொலைத்தொடர்பு நிலையம்
இல:964, நாச்சிமார் கோயிலடி,
(C/31226) யாழ்ப்பாணம்.

### தொலைபேசி விற்பனைக்குண்டு

மோட்டறோலா தொலைபேசி இணைப்புடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு -
இல. 30, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.
T.P. 021-222 6728
(24583) (35)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தயாபரி ஆனந்தகுமார்**

(பானு Garments)

மலர்வு 03-07-1960 — உதிர்வு 12-10-2003

எங்கள் குடும்ப தீபமே!
அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு எங்கு
சென்று விட்டாய்?
உன் பிரிவை
ஏற்க முடியவில்லையம்மா!
உன் நினைவால் வாடுகின்றோம்!

இல.11, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (24591)(34-12-15)

கணவர், பிள்ளைகள், தந்தை மற்றும் உற்றார், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி சண்முகராசா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சண்முகராசா அவர்கள் நேற்று (10.11.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆ.சண்முகராசா (சண்முகம் அன்சன்ஸ் ஸ்தாபன முன்னாள் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், நாகம்மா, தங்கம்மா மற்றும் மகேசு, மகாலிங்கம், காமாட்சி ஆகியோரின் சகோதரியும் திருமதி மகாலட்சுமி, இராசலட்சுமி, இராசரத்தினம் மனோகரன் (Canada), மனோரஞ்சிதம், ஈஸ்வரி (மலேசியா), தையல்நாயகி (U.S.A.), சிறிதேவி (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சிவஞானவதி, இராஜேந்திரன் (மலேசியா), பாலேஸ்வரன் (U.S.A.), கணாதீபன் (Canada) ஆகியோரின் மாமியாரும் கலைச்செல்வன், அனுசியா, சுரேன, ஜெயா, உ[illegible]ர்த்தனி, ஜன்கோபன், ஜலதாரிணி, ஜெயகபில், பாஸ்கர், சானுஜா, சயந்தன், கஜனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*185, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24585) (25-12-15)

தகவல்:
ச.இராசரத்தினம்.
(மகன்)

## பொன்னையா இரத்தினம்

**(பிரபல சோதிடரும், முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகரும், சமூக சேவகரும், ஆன்மீகவாதியும்)**

ஏரந்தனை, புத்தூர் வடக்கு, புத்தூரைச் சேர்ந்த பொன்னையா இரத்தினம் 07.11.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் இராசகுமாரி, காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் சிவகுமார், ஜனகன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.11.2003 சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏரந்தனை,*
*புத்தூர் வடக்கு.* (24589)(35)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# சமாதானத்துக்காக இணைகின்ற மனங்களை பிரித்துவிட முடியுமா?

**யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து தமிழ் - சிங்கள மக்களிடையே புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது குறித்தும் கொழும்பில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சியின்போது இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குழப்பங்கள் குறித்தும் சிறந்த பத்திரிகையாளரும் சிந்தனையாளருமான சுனந்த தேசப்பிரிய இக்கட்டுரையில் ஆராய்கிறார். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்ச் சமூகம் கடந்த 20 ஆண்டு காலமாக நாட்டின் ஏனைய சமூகங்களிலிருந்து படிப்படியாக விலகியே வாழ்ந்து வந்துள்ளது. வடபகுதியில் வதியும் பழைய பரம்பரையினர், தென்பகுதி அரசியல்வாதிகள் யுத்தத்தை முன்னிலைப்படுத்தியே நிர்வாகத்தை மேற்கொள்ளுகின்றனர் என்ற கண்ணோட்டத்தில் நோக்குகின்றனர். ஸ்ரீலங்காவின் பலதரப்பட்ட சமூகங்கள் யுத்தம் என்ற இரும்புத்திரையால் ஒருவரிலிருந்து ஒருவர் தூர விலகி நிற்கும் மனப்பான்மையுடன் இயங்குவதாகத் தோன்றுகிறது. இது எந்த அளவுக்கு யதார்த்தமானதென்பதை ஸ்ரீலங்காவின் செய்திப் பத்திரிகைகளின் செய்திவெளியீடு தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட ஐ.நா.சபையின் ஊடகப் பிரிவு தெரிவித்த கருத்தின் மூலம் புரிந்துகொள்ள முடியும். ஸ்ரீலங்காவின் தமிழ் மற்றும் சிங்கள பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை அவதானிக்கும் போது அவை இரு வெவ்வேறு நாடுகளின் செய்திப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் போன்று தென்படுவதாக அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டில் போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்ததையடுத்து நாட்டின் ஏனைய பகுதிகளில வாழும் சாதாரண மக்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று அப்பகுதி மக்களைச் சந்தித்துத் திரும்பினர். அதேபோன்று வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்கள் நீண்டகால இடைவெளியின் பின்னர் சிங்களப் பொதுமக்கள் வாழும் நாட்டின் ஏனைய பகுதிகளுககுச் சென்று அவர்களுடன் சில நாள்கள் தங்கிப் பழகியதன் மூலம் ஒரு தரப்பினர் குறித்து மறுதரப்பினர் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தைப் போக்கிக் கொள்வதற்கு உற்சாகம் காட்டி வந்தனர்.

இவ்வித சகல சந்தர்ப்பங்களிலும், ஒரு தரப்பினர் குறித்து மறுதரப்பினரின் மனங்களில் உருவாகியிருந்த அவநம்பிக்கை மற்றும் தப்பபிப்பிராயம் என்பவற்றை இரு தரப்பினரும் வெளிப்படையாக உணர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. இவ்வித புரிந்துணர்வை இரு தரப்பினர் மத்தியிலும் உருவாக்கும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட பயணத் திட்டங்களின் முடிவில் " நாம் சகலரும் இந்நாட்டின குடிமக்களே; இதுவரை உங்களைப் பற்றி நாம் தப்பபிப்பிராயம் கொண்டிருந்தோம். சந்தர்ப்பம் கிட்டும் வேளையில், நீங்கள் இன்னொரு தடவை இங்கு வந்து எங்களுடன் தங்கிச் செல்ல வேண்டும்" என்பன போன்ற வார்த்தைகளுடன் ஒரு தரப்பினரை மறுதரப்பினர் வழியனுப்பி வைத்ததைக் காணக் கூடியதாய் இருந்தது.

கடந்த இருபது ஆண்டுகளாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பலனாக நாட்டின் சமூகங்கள் மத்தியில மனத்தளவில் தூர விலகிச் செலலும் வேறுபாடு உருவாகியது கவலைக்குரிய விடயமாக அமைந்தது. இவ்வித மனவேறுபாடுகள், அரசியல் கடுங்கோட்பாளர்கள் தங்களுக்குத் தேவையான சேறும் சகதியும் நிறைந்த அரசியல் தளத்தை உருவாக்கும் வகையில் இனங்கள் மத்தியில் அவநம்பிக்கை மற்றும் குரோத மனப்போக்கை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர். உண்மையில் இவ்வித மனவேறுபாடு இனங்கள் மத்தியில் உருவாக யுத்தகளம் காரணமாக அமையவில்லை. சிங்கள மற்றும் தமிழ்மக்களின் உள்ளங்களே காரணமாகும். யுத்தத்தினால் ஏற்பட்ட அச்சமூட்டும் மனிதப் படுகொலைகள் காரணமாக காயப்படுத்தப்பட்ட மனிதாபிமானத்தை நெருக்கமான பரஸ்பர நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்களால் மட்டுமே சுகப்படுத்தமுடியும்.

எந்தவிதத்திலும் யுத்தம் நிரந்தரமானதொன்றல்ல; மனிதத் தன்மையின் குறிக்கோள், எவர்மீதும் இம்சை, பலவந்தம் மற்றும் மிரட்டல் எதுவும் பிரயோகிக்காத விதத்தில் எட்டப்படும் சமாதான வாழ்க்கையாகும். யுத்தத்திலிருந்து விடுபட மேற்கொள்ளும் முயற்சி, மனிதத் தன்மை கொண்ட உள்மனச் சிந்தனைகளாலும், நியாயமான செயற்பாடுகளாலும் மட்டுமே வெற்றிபெறமுடியும்.

இவ்விடயத்தில் அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் சமாதானம் தொடர்பான அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டதாகும். அரசியல் தேவைகள், வர்த்தக, வியாபார நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் தேவைகள் மற்றும் அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான தேவைகள் என்பன இவற்றிடையே முக்கியத்துவம் பெறுகின்றன. சமாதான நடவடிக்கைகளில் வெற்றி காண வேண்டுமாயின் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியமாகும். நாட்டின் தற்போதைய நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில தீர்வு காணப்படுவது அவசியமானதென்பது அரசியல் நிலைப்பாடாகும். 2000ஆம் ஆண்டு ஜுலைமாதம் 20 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பொருளாதாரத் துறையில் நிலவிய பிரச்சினைக்கான தீர்வுதேடும் முயற்சி உச்ச கட்டத்தை அடைந்தது. 'ஸ்ரீலங்காவை முன்னேற்றுவோம்' என்ற பெயரில் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைவு நிகழ்ச்சியில் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள பங்கேற்றதன் மூலம் இப்பொருளாதார அபிவிருத்தித்தேவை வெளிக்கொணரப்பட்டது.

ஜனநாயக ரீதியில் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் தற்போதைய முயற்சியின் இறுதியில் நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் தற்போது நாம் எதிர்நோக்கும் முக்கிய சவால் சமாதானத்தின் மூலம் சமூகங்களின் கலாசாரத்தைப் பலமடையச் செய்வதாகும். இக்கலாசார முன்னேற்றம் தொடர்பாக அரசியல்வாதிகளும் வர்த்தக சமூகத்தினரும் வகிக்கும் பங்கு ஒரு சிறு அளவினதேயாகும். ஆனால், மற்றொரு வகையில் நீண்டகாலமாக சமாதான சகவாழ்வின் சிறப்பினைப் பேணிக்காக்க பெரும் உறுதுணையாக விளங்கியது இச் சமூகக் கலாசாரக் கட்டுக்கோப்பேயாகும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு பொதுமக்களிடையே புரிந்துணர்வை உருவாக்கும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற தமிழ்ப் பிள்ளைகளுடன் பேசிப் பழகி ஒரு சில நாள்களை ஒன்றாகக் கழித்த சிங்களப் பிள்ளைகள் போன்றே, சிங்களப் பொதுமக்களின் வீடுகளில் இடம்பெற்ற கலாசாரக் கொண்டாட்டங்களில் பங்குபற்றி மகிழ்ந்த தமிழ்ப் பிள்ளைகளும் எந்த வகையிலும் அழிவுதரும் யுத்தத்துக்கு ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை. யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமிழ்மக்களுடன் ஒரு சில நாள்கள் பழகித் திரும்பிய கிராமப் புறச் சிங்களப் பொதுமக்கள் தத்தமது சொந்தக் கிராமங்களில் சமாதானத்தை வற்புறுத்திக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யும் அளவுக்கு அவர்களது மனதில் தமிழ் மக்கள் தொடர்பாக நிலவி வந்த தப்பபிப்பிராயம் அற்றுப்போயுள்ளது. இதன் காரணமாகவே இன்று ஏனைய நடவடிக்கைகளை விட சிங்கள மற்றும் தமிழ்ப் பொதுமக்களிடையே நல்லெண்ணத்தையும் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வையும் அதிகரிக்கச் செய்யும் வகையில் சமூக கலாசார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டியது மிக அவசியமான தேவையாய் அமைகிறது.

திலக பண்டாரவின் 'சாதுஜனராவ' என்ற சிங்கள இசை நிகழ்ச்சியைக் கேட்டு ரசிக்கும் சந்தர்ப்பம் 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத் தமிழ்மக்களுக்கு கிடைத்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் நிமலராஜன் நினைவு தினக்கூட்டத்தில் 'பிரசந்த லியனகே'யின் புரசந்த களுவர நிகழ்ச்சியை தமிழ்மக்கள் மத்தியில் எம்மால் மேடையேற்ற முடிந்தது.

இச்சந்தர்ப்பங்களின் போது அந் நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் பேராதரவு பெற்றன. கலாசாரங்களின் இணைப்பு பிரிக்கப்பட முடியாதவை. ஏனெனில், அவை திரவங்களின் இணைப்புப் போன்று இரண்டறக் கலந்தவையாகும்.

அண்மையில் தர்மசிறி பண்டாரநாயக்க உட்பட்ட சினிமா ஊடகத் துறையினர் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்குச் சென்று சிங்கள சினிமா விழாக்களை நடத்தினர். சிங்கள சமூகத்தின் எண்ணங்களைத் தமிழ் மக்கள் அறிய வைப்பதைப் போன்ற சிறந்த நடவடிக்கை வேறெதுவுமில்லை.

சாமிநாதன் விமல் என்பவர் மலைநாட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் சிங்களப் பெண்மணியைத் திருமணம் புரிந்தவர். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து சிங்கள மொழியைக் கற்பித்து வருகிறார். இவர், யாழ்ப்பாணக் கவிஞர்களின் கவிதைகளைச் சிங்களமொழியிலும், சிங்கள கவிஞர்களின் கவிதைகளைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்து கலாசாரத் தொண்டாற்றி வருகின்றார் (இவ்வகைப் பணியை ஓராயிரம் துவக்குகளால் நிறைவேற்ற இயலுமா?).

அண்மையில் தலைநகர் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட சமூக கலாசார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட சிங்கள, தமிழ் கலைஞர்களின் ஒன்றுகூடலைக் குழப்பும் நோக்கத்தில் இனவாதக் குழுவினர் கலகம் விளைவித்தனர். இச்சிங்கள - தமிழ்க் கலைஞர்களின் கலை நிகழ்ச்சியை குழப்ப முயற்சித்த இச் செய்கையை நாம் இன அவநம்பிக்கை என்ற வகையிலேயே கருதவேண்டியுள்ளது. இதன்மூலம் இக்கடும் கோட்பாட்டாளர்கள் தமிழ்ச் சமுதாயத்தையும் அவர்களது கலாசாரப் படைப்பாளர்களையும் வைராக்கியம் கொளளச் செய்கின்றனர். ஏனெனில், இந்த இனவாதிகளால் யுத்தத்தைப் புறக்கணித்து கலாசார நோக்குடன் செயற்படமுடியாதுள்ளது. அவர்களது கடுங்கோட்பாட்டு வைராக்கியம் அவர்களுக்கு உணமைநிலையைப் புரிந்துகொள்ள இயலாத தன்மையை உருவாக்கியுள்ளது.

இந்நாடு சிங்கள மக்களுக்கே உரிமையானதெனவும், ஏனைய இனத்தவர்கள் அதனை ஏற்று அனுசரித்து அந்நிலைப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமெனவும் அவர்கள் கருதுகின்றனர். "இந்நாடு சிங்கள மக்களுக்குரியது ஏனைய இனத்தவர்கள் இதனை ஏற்றுக்கொண்டாக வேண்டும்" என்பது அவர்களது வாதமாகும்.

இந்நிலைப்பாடு சமத்துவத்தையும் சமாதானத்தையும் வெளிப்படுத்துவதாகாது; பதிலாக விஷமத்தனத்தையும் யுத்த நோக்கையும் வெளிப்படுத்துவதாகும். அவர்களுக்கு தமிழ்ச் சமுதாயத்துடன் கலாசார இணைப்புடனான வாழ்வுமுறை குறித்து அக்கறையில்லை. அதுமட்டுமன்றி, அது தொடர்பான அச்சமும் அவர்கள் மத்தியில் நிலவுகின்றது. அத்தோடு, அது குறித்து அவர்கள் வைராக்கியம் கொண்டு காணப்படுகின்றனர். இதன் காரணமாகவே அமைதியான முறையில் இடம்பெற்ற சிங்கள, தமிழ்க் கலைஞர்கள் ஒன்றிணைந்த அக்கலைநிகழ்ச்சியைக் குழப்புவதற்கு அக்கடும் கோட்பாட்டாளர்கள் முயற்சித்தனர்.

நாம் இது தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய கருத்தென்ன? ஆவேசமிக்க கடும்கோட்பாளர்கள் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்க முயல்வதே இதற்கான வழியாகும். ஆனால், தமிழ், சிங்கள மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடிய இவ்வகை கலாசார நடவடிக்கைகள் பெறுமதி கொண்டவையாகும். வேறுபாடுகளைக் களைதல் மூலம் இவற்றுக்குக் கௌரவமளித்தல் அவசியமாகும். சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களது தனித்துவக் கலாசாரங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்வதற்காக இதைப்போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளை நாம் ஒழுங்கு செய்யவேண்டியது அவசியமாகும். கடுங்கோட்பாட்டாளர்கள் இவற்றில் தலையிடாதிருக்கும் வழிவகைகளை நாம் தேடிக்கொள்வது அவசியமாகும்.

சிங்களப் பொதுமக்களை தோசை, வடை போன்ற தமிழர்களின் உணவு வகைகளை உண்ணுமாறு வற்புறுத்த முடியாது. அதேபோன்று வற்புறுத்தலின் பேரில் தமிழ்ப் பொதுமக்களைச் சிங்கள மக்களின் உணவு வகைகளான பாற்சோறு மற்றும் பலகாரத்தை உண்ணவைக்க இயலாது. ஆனால், தைப்பொங்கல் கொண்டாட்டத்தில் சிங்கள மக்கள் கலந்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் பொங்கலை உண்டு ரசிப்பதையும், புத்தாண்டுக் கொண்டாட்டதில் சிங்கள மக்களது வீட்டுக்குச் செல்லும் தமிழ்மக்கள் அவர்களது உணவுப் பண்டங்களை உண்டு மகிழ்வதையும் நாம் காண முடிகிறதல்லவா? துப்பாக்கிகளை விட இவை கலாசாரம், நாகரிகமான செயல்கள் அல்லவா? கடும்கோட்பாளர்கள் அஞ்சுவதற்கும் ஆத்திரம் கொள்வதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

## வீயெஸ்ரி

'பராக்கிரம கொடித்துவக்கு' கூறியது போன்று மனங்கள் இணைவதன் மூலமே உண்மையான பாலம் உருவாக்கப்படுகிறது. எமக்கு சமாதான சகவாழ்வும் அமைதியான நாடும் அவசியமாயின் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய கலாசாரம் அவசியமாகும். இதற்கு சிங்கள, தமிழ்க் கலைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஊடகத்துறைசார்ந்தோரின் பங்களிப்பு மிக அவசியமாகிறது. இந்நாட்டின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்மக்களில் பெரும்பாலோர் யுத்தத்துக்கும் யுத்தவாதத்துக்கும் எதிரானவர்களாவர். பாதை தவறிச்சென்ற கடுங்கோட்பாளர் ஒரு சிலரின் கூச்சலால் இச் சமாதானத்துக்கான தேடலை அடக்கி விடமுடியாது. ★

---

# திட்டங்கள் பல தீட்டிய போதிலும் வறுமையை ஒழிக்க முடியவில்லை

## கோப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

வலி.தெற்கு,நவ.11

உலக நாடுகளில் எல்லாம் வறுமை நிலை தொடர்கிறது. வறுமை ஒழிப்புக்காக இதுவரை நாட்டில் 17 திட்டங்கள் வரை நடைமுறைப்படுத்தியும் கூட, வறுமையை ஒழிக்க முடியவில்லை. இதனால், வறுமைத் தணிப்பு திட்டமாக சமுர்த்தி திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி மகா சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸவரன் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம், கதிரமலை சிவன் கோவில் மணிமண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர் மேலும் கூறியதாவது:-

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலர் உணவு வழங்கல், அவர்களின் வாழ்க்கையை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்தல், சேமிப்புத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதே சமுர்த்தித் திட்டம்.




**உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஏற்பாடுசெய்த நிகழ்வொன்றில் லயன்ஸ் கழக யாழ். பிராந்தியத் தலைவர் வைத்திய கலாநிதி வி.யோகேஸ்வரன், பொதுமக்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி மூக்குக் கண்ணாடிகளை உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் சு.தர்மஜெயசூரியரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.**

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

வறுமை ஒழிப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட 'ஜனசவிய' திட்டம் வெற்றியளிக்காமையால் இன்றைய அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சமுர்த்தித்திட்டம் தென் இலங்கையில் வெற்றி கண்டமையால் சமுர்த்தி அதிகார சபை தமிழ் பிரதேசங்களிலும் இதனை முன்னெடுக்க முயன்றுள்ளது.

எமது பிரதேசத்தில் இத்திட்டம் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. இதன்மூலம் மக்களிடம் சிறிது காலமாகவே பணத்தைப் பெற்றுச் சேமிக்க முடிந்துள்ளது. மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் கடன் வழங்கல், அபிவிருத்தி வேலைகள் என்பவற்றை ஆரம்பிக்க சிறிதுகாலம் எடுக்கும்.

கடன் வழங்கும் படிமுறைகள், அவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னரே மக்களின் எதிர்பார்ப்புகளான கடன் வழங்கல், அபிவிருத்திப் பணிகள் என்பவற்றுக்கான அனுமதியை சமுர்த்தி அதிகார சபை வழங்கும். நிச்சயமாக நீங்கள் நம்பிக்கையுடன் செயற்படுங்கள். அதற்கான பலன் நிச்சயம் கிடைக்கும் - என்றார்.

உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தமது தலைமையுரையில்:-

சமுர்த்தித் திட்டத்தில் பங்குபற்றுவதன் மூலம் தமது இலவச நிவாரணத்தை இழக்கவேண்டி ஏற்படும் என முதலில் இத்திட்டத்தில் இணைந்துகொள்ள பலர் பின்னடித்தனர். இலவச நிவாரணத்தை நாம் நிறுத்தாது இத்திட்டத்தை செயற்படுத்துவது கண்டு இதற்கு நல்ல ஒத்துழைப்பை மக்கள் வழங்கி வருகின்றனர் - என்றார். (எ-152)

# உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு அதிகம்

"விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலமே வளம்பெறச் செய்யமுடியும்."

யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் கமநலசேவை நிலையங்கள் ஊடாக நடத்தப்பட்டு வரும் கமக்கார அமைப்பினருககான பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உடுவில், கீரிமலை கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட கமக்காரர் அமைப்புப் பிரதிநிதிகள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

உடுவில் கமநல சேவை நிலையத்தில் ந.குழந்தைவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆற்றிய உரையின் தொகுப்பு இது.

இலங்கையில் 60 லட்சம் மக்கள் வாழ்ந்த 1946 ஆம் ஆண்டில் மூன்றில் ஒரு பகுதி மக்களுக்கு தேவையான உணவு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. 2 ஆம் உலக யுத்தத்தின்பின் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட கூப்பன் முறையினால் விவசாயிகளின் முயற்சி பெருமளவு ஊக்கம் குறைந்து காணப்பட்டது.

எமது உணவுத் தேவைக்காக பலவகையான கிழங்குகளையும், வரகு, குரக்கன், சாமை போன்ற தானியவகைகளையும் பெருமளவில் உற்பத்திசெய்துவந்த விவசாயிகள் பலர், 2 ஆம் உலக யுத்தத்தின்பின்

பெருமையை நாம் பெற்றுள்ளோம்.

அரசு எமது விவசாய சார்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறினாலும், எமது பிரதேச மண்ணில் விவசாய அபிவிருத்தி மேற்கொள்வதைவிட, மக்களைக் குடியமர்த்துவதிலேயே கூடிய அக்கறை காட்டிச் செயற்பட்டு வந்துள்ளது.

எமது பிரதேச மக்கள் விவசாய உற்பத்தியில் கண்டுள்ள வெற்றிபோல கடல் வளம் பேணுவதில் வெற்றிபெறவில்லை. அதேபோல காய்கறி உற்பத்தியில் வெற்றிபெற்றநாம், பழ வகை உற்பத்தியில் ஈடுபடத் தவறிவிட்டோம். விவசாய, மரக்கறி உற்பத்தி வெற்றிபோல கடல்வளம், பழமர உற்பத்தியிலும் அதிகமாக ஈடுபட்டு வெற்றிகாணவேண்டும்.

எமது பிரதேசம் வளமானது. 440 சதுர மைல்களைக் கொண்ட யாழ். குடாநாட்டின் சகல இடங்களும் பயன்படுத்தக்கூடியவையாக உள்ளன. சமதரை அமைப்பைக் கொண்ட இப்பிரதேசம் அளவானமழை, செழிப்பான

நெல், மரக்கறி, வாழைச் செய்கையில் ஈடுபடுவோர் தமக்கு அவற்றால் போதிய வருமானம், லாபம் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் தமது உற்பத்திகளை மேலும் அதிகரிக்கும்போது வருமானமும் அதிகரிக்கும; லாபமும் கிடைக்கும்.

யாழ்ப்பாணத்தில் இன்று விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் விவசாயம் செய்யத் தடை ஏதுமில்லை. நிலம், நீர், தரமான விதைகள், விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் எல்லாம் கிடைக்கின்றன. அண்மைக்காலங்களில் குடாநாட்டில் புதிய பயிரினங்களான லீக்ஸ், கரட், கோவா, உருளைக்கிழங்கு, பொன்னாங்காணி, வல்லாரை, கங்குங்கீரை போன்றவை பெருவெற்றிகண்டுள்ளன. இவற்றை வெற்றிகரமாக செய்கை பண்ணிய விவசாயிகளையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். எனினும், விவசாய உற்பத்தியில் விவசாயிகளால் இன்னும் வளர்ச்சி காணமுடியும்.

## போதிய வசதிகள் கிடைப்பின் வளமான எதிர்காலம் உண்டு

செம்மண்நிலம், வழுக்கியாற்று வளம் என்பன நிறையப்பெற்றது. ஒவ்வொரு கிராமங்களும் அவற்றுக்குரிய அழகுடன் விளங்குகின்றன. எங்கும் பசுமையான தோற்றம் விவசாயிகள் நெல்,

விவசாயிகளின் வறுமைநிலை, விவசாயத்தில் ஈடுபடக்கூடிய மனித வலுப் பெறுமானம் குறைவு, உற்பத்திச்செலவு அதிகரிப்பு, போதியசந்தை வாய்ப்பின்மை, போதிய லாபம்பெற முடியாமை போன்ற பல பிரச்சினைகளை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து சமாளிப்பதற்கு பரம்பரை விவசாயக் குடும்பங்கள் நூற்றுக்கு நூறு வீதம் முற்றுமுழுதாக விவசாயத்தையே நம்பியிருக்கமுடியாத நிலையில் வாழ்கின்றன.

விவசாயக் குடும்பத்தில் யாரோ ஓர் உறுப்பினர் விவசாயம் தவிர்ந்த வேறொரு தொழிலை மேற்கொண்டு வருமானத்தைத் தேடவேண்டியுள்ளது. அப்படி இன்னொரு தொழிலை மேற்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு நிலை ஏனைய மாவட்டங்களை விட யாழ். மாவட்ட மக்களுக்கு கிடைத்திருப்பது அதிர்ஷ்டவசமானது.

விவசாயிகள் தமது வாழ்க்கைத் தரத்தை விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதன்மூலமே உயர்வடை




னர் கூப்பனுக்கு அரிசி, மா போன்ற பொருள்கள் வழங்கப்பட்டதனால், தமது விவசாய முயற்சிகளைப் பெருமளவில் கைவிடத் தொடங்கினர்.

கூப்பன்முறை அமுல் செய்யப்பட்டதன் பிறபாடே யாழ். மக்கள் வெளிநாட்டுக் கோதுமை மா, அரிசி போன்றவற்றின் பாவனைக்கு அறிமுகமாகினர்.

அன்றைய கால திரைப்படங்கள் கூட விவசாயம் தொடர்பான, குடும்ப வறுமைநிலை தொடர்பான, அவற்றுக்குத் தீர்வுகாணும் வழிகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தன. ஆனால், நிலைமை மாறி இன்று செல்வந்தர்களின் நிலையைப் பிரதிபலிக்கும் 'பிறேக் டான்ஸ்' போன்ற காட்சிகளைக் கொண்டு வெளிவருகிறது.

கூப்பன் அரிசியே அன்று தொடக்கம் இன்றுவரை இலங்கை அரசினைத தீர்மானிக்கும் கருவியாக விளங்கி வருகிறது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிவாரணம் என்ற பெயரில் இன்றும் பல பொருள்களை இலவசமாக வழங்கும் நிலை நீடிக்கின்றது.

1989 இல் ஏற்பட்ட விவசாய மாற்றங்கள் ஓரளவு உணவுப்பொருள் தன்நிறைவைப் பெறவைத்துள்ளது. ஒரு சில உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யக்கூடிய

மரக்கறி என்பவற்றை போதிய அளவு செய்கைபண்ணுகிறார்கள்.

இருப்பினும், எமது உணவு நுகர்வுப் பழக்கம் அரிசி, கோதுமைமா என்பவற்றின் இறக்குமதியை அடிப்படையாகக்கொண்டே இன்றும் மேற்கொள்ளப்படும் நிலை வேதனைக்குரியது.

எமது நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. இங்கு உற்பத்தியாகாத கைத்தொழில் பொருள்களை இறக்குமதி செய்யலாம். ஆனால், விவசாயப் பொருள்களை அதிக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவேண்டும்.

வெளிநாடுகளில் வசிக்கும் எமது உறவினர்கள் எமது பிரதேச உணவுப் பொருள்களையே விரும்பி வாங்குகின்றனர். எமது நாட்டு உணவுப் பொருள்களை சாப்பிட்டுப்பழகிய வாய்க்கு பிறநாட்டு உணவுப் பொருளில் நாட்டமிராது. மூளாய் கயல்மீன், மயிலிட்டி சுறாமீன் எனச் சாப்பிட்டுப்பழகிய மக்கள் வெளிநாட்டில் இருந்தாலும் தம் ஊர் உற்பத்திகளையே விரும்புகின்றனர். 'மொட்டைக் கறுப்பன்' போன்ற அரிசிவகைகள் அங்கு பொதிசெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபடுவோரைத் தவிர,

### வீ.பி.சர்மா
*வலிகாமம் தெற்கு செய்தியாளர்*

யச் செய்யலாம். தவிரவும், மாற்றுக் கைத்தொழில் முயற்சிகளிலும் ஈடுபடலாம். தமது உற்பத்திப் பொருள்களை மேலும் பெறுமதிகூடிய மாற்றுப் பொருள்களாக மாற்றுவதன் மூலமும் அவற்றைப் பதப்படுத்தி சந்தைப்படுத்துவதன் மூலமும் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விவசாயத்துறையில் புதிய நவீன திட்டங்கள் உட்புகுத்தப்படவேண்டும்; உற்பத்திகளின் தரம் அதிகரிக்கப்படல் வேண்டும். தரமான பொருள்களை உற்பத்தி செய்யும் போது அவற்றைப் போதியளவு சந்தைப்படுத்த வாய்ப்புக்கள் ஏற்படும்.

விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி ஊடாகத் தொழில தொடர்பான அறிவை வளர்க்கச் செய்ய வேண்டும். அறிவுசார்ந்த விவசாயம் முன்னெடுக்கப்படவேண்டும். விவசாயிகள் அறிவுப் பலமிக்கவர்களாக இருந்தால் அவர்களின் வாழ்க்கை நிலை சிறப்படையும்.

## உரமானியத் திட்டத்தின் மூலம் தென்னைகளுக்கு உரமிடுங்கள்

குடாநாட்டில் மழைபெய்ய ஆரம்பித்தவுடன், முதிர் தென்னைகளுக்கு APM (முதிர்மரக்கலவை) உரத்தினை 3 கிலோ வீதம் உரமானியத்திட்டத்தின் கீழ் வழங்கி போடுவதன் மூலம் தேங்காய் உற்பத்தியைக் கூட்டலாம்.

குடாநாட்டில் உள்ள ஏதாவது கமநலசேவை நிலையத்தில் APM (தென்னை முதிர்மரக்கலவை) உரத்தினை வாங்கி அதன் பற்றுச்சீட்டினை யாழ்ப்பாணம் தென்னை அபிவிருத்தி அலுவலரிடம் சமர்ப்பித்து உடனேயே உரமானிய விண்ணப்பப் படிவத்தினையும் பெற்று தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் வழங்கப்படும் உரமானியத்தினை செய்கையாளர்கள் பெறமுடியும்.

பாளை வந்து காய்க்கும் தென்னை மரங்களுக்கு, மூன்று கிலோ APM உரத்தினை தென்னை மர அடியிலிருந்து ஆறு அடி சுற்றுவட்டப் பரப்பளவு முழுவதும் மண்ணைக் கொத்திப் புரட்டிய பின்பு தூவி மண்ணுடன் கலந்து விடவும். இப்படிச் செய்வதன் மூலம் தென்னையிலிருந்து அதிகளவு தேங்காய்களை மாதம் ஒரு முறை பெற்றுக்கொள்ள முடியும்.

உரமானியத்தினையும், மண் ஈரப் பாதுகாப்பு மானியத்தினையும் பெற விரும்பும் தென்னைச் செய்கையாளர்கள் உடனடியாக காலம் பிந்தாமல் ஜெ.சத்தியேந்திரன், யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையக் கட்டடம், நல்லூர் எனும் முகவரியில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சைவசமயதீட்சை

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் மேற்படி நிகழ்வில் பங்குபற்றி சைவசமய தீட்சை பெற்றுக்கொள்ளலாம் என சபையின் செயலாளர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அறிவித்துள்ளார். (6)


## நெஞ்சை விட்டகலா நினைவஞ்சலி

4 ஆம் ஆண்டு

மண்ணில் 10 - 09 - 1947



விண்ணில் 27 - 10 - 1999

அமரர்

**முருகேசு சின்னத்துரை**

(முன்னாள் முகாமையாளர், கொடிகாமம் ப.நோ.கூ.ச.கிளை)

திதி: 11.11.2003

*அன்புடனும் அறிவுடனும் எமை அரவணைத்த*
*எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!*
*எங்கள் நெஞ்சங்களைத் துடிக்க விட்டு*
*விண்ணுலகம் சென்று விட்டீர்களே!*
*– அப்பா!*

*உங்கள் சேவையில் அனுவளவேனும் களங்கமின்றி*
*உங்கள் நோயையும் பாராது உயிர் நீத்த உத்தமரே!*
*ஆயிரம் உறவுகள் இருந்தாலும்*
*உங்கள் உறவுக்கு ஈடாகுமா?*
*– அப்பா!*

*வேரற்ற ஆலமரமாக விழுதுகள் தாங்கிட நாமும்*
*விழிமூடும் நாள்வரை உங்கள் நிழல் தேடி அலைகின்றோம்*
*நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்*
*உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டகலாது*
*– அப்பா!*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

தகவல்:
திருமதி சந்திரகுமார் சஷிரேகா (மகள்).

குடமியன், வரணி. (C/31222)(34-15)



## யாழிங்காய் விழுதெறிந்து நின்ற வீரனின் 2ஆம் ஆண்டு நினைவலைகள்

யாழில் 17 - 04 - 1974



யாழிற்காய் 11 - 11 - 2001

**கப்டன் பருதியப்பன்**

(செல்லப்பா சிவகுமார்)

*எங்கள் இதயக் கோயிலின் இதய தீபம்*
*ஒன்று அணைந்து இன்றுடன் ஆண்டு இரண்டு ஆனதுவோ?*

வெஞ்சமர்க் களத்தில் வீரம்
விதைத்தவன், எதிரிதன்னை
அஞ்சிடாது எதிர்த்து நின்று
அழித்த நல் ஆற்றல் மிக்கோன்
வஞ்சகப் பகை யொழிக்கும்
வழியினைத் தேடிச்சென்று
வரலாறு படைக்கு முன்னே
வரலாறு ஆகிவிட்டான்.
நெஞ்சிலே நிறைந்து நின்று
நித்திய வாழ்வை வென்ற
வேங்கையான் பருதியப்பன்
பாதங்களில் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
லெப்.கேணல் சிவனேசன்,
கப்டன் தூயோன், கப்டன் ரூபன்
ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

பலாலி கிழக்கு,
பலாலி.

என்றும் அழியா நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

(C/3628) (26-04-15)

# சோதனைச் சாவடிகளைக் குறைப்பதற்குத்தான் முடிவுசெய்துள்ளோம் என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, நவ.11

தலைநகரில் சில இடங்களில் உள்ள சோதனைச்சாவடிகளை அங்கிருந்து நீக்குவதற்கு முடிவெடுத்திருக்கின்றோமே தவிர, மேலதிக சோதனைச் சாவடிகளோ, பாதுகாப்பு அரண்களோ எங்கும் நிறுவப்படவில்லை.

- இப்படிக் கூறியிருக்கிறார் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

தற்போதைய அரசியல் நெருக்கடியையடுத்து - பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதை அடுத்து - ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் என்ன என்று கேட்ட போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை நெருக்கடியான ஒன்றாக நான் காணவில்லை. சாதாரண நிலைமையாகக் கருதியே நாம் பணியாற்றி வருகிறோம்.

முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியிடமிருந்து - வழமைபோன்று - நாம் அறிவுறுத்தல்களைப் பெற்று வருகிறோம்.

முன்பு பிரச்சினைகள் இடம்பெற்ற அரச அச்சகத்துக்கு முன்பாகவும் அரச ஊடகங்களான ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆகியவற்றுக்கு முன்பாகவும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். நாம் யுத்தத்துக்கு மீண்டும் செல்லமாட்டோம். புலிகள் கூட யுத்தத்துக்கு மீண்டும் செல்ல மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். புலிகளுக்கு யுத்தம் வேண்டாத வரை எமக்கும் அது தேவையில்லை.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

**இந்திரா டி சில்வா**
**(பதில் பொலீஸ்மா அதிபர்)**

சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைவரத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரி என்ற வகையில் எனக்கு இந்த நாட்டின் சட்டமே "எஜமான்' இந்த நாட்டின் சட்டம் அதாவது, அரசமைப்பால் நாம் வழிநடத்தப்படுகிறோம். ஏனைய சட்டங்கள் எல்லாம் அதன் கீழேயே வருகின்றன.

உள்துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அவரிடமிருந்து எந்த அறிவுறுத்தல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தும்படி ஜனாதிபதி என்னிடம் கூறியுள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்கு அச்சுறுத்தல் இருக்கிறதோ இல்லையோ அது விடயத்தில் நாம் உச்ச ஆயத்தநிலையில் இருக்கவேண்டும் - இப்படி அவர் கூறியுள்ளார்.

**டொனால்ட் பெரேரா**
**(விமானப் படைத்தளபதி)**

படைத்துறைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சகலரும் நிலைமையை அவதானித்து வருகின்றார்கள்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதால் எந்த மாற்றமும் ஏற்பட்டதாக நான் காணவில்லை. புதிய அமைச்சருடன் நாம் சாதாரணமாகவே பணியாற்றிவருகின்றோம்.

பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்கும் முன்னரும் முப்படைகளின் தளபதி என்ற வகையில், எமக்கு ஜனாதிபதியிடமிருந்தே உத்தரவுகள் கிடைத்தன.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதால் தற்போதைய நிலைமையில் மாற்றம் ஏற்படும் என்று கருதுவதில் காரணம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

நாடு யுத்தத்துக்கு மீண்டும் தள்ளப்படும் என்ற பொதுமக்களின் கருத்துத் தவறானது.

முப்படைகள் என்ற வகையில் நாம் சமாதானக் காலத்துக்கோ, யுத்த காலத்துக்கோ தயாராக இருக்கவேண்டிய தேவை உள்ளது.

மறுதரப்பைப்போலவே நாமும் பயிற்சியளித்தல் இராணுவ தளபாட சுவீகரிப்பு ஆகியவற்றை எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் பிரகாரம் மேற்கொண்டுவருகின்றோம்.

ஆயுத படைகள் எந்த நிலைமைகளையும் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளன.

- இப்படி அவர் கூறினார்.

# பொறுப்பேற்ற அமைச்சுக்களில் ஒன்று மீளக் கையளிக்கப்படுமா?

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

கொழும்பு, நவ.11

ஜனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்களில் ஒன்றை மீண்டும் அரசிடம் கையளிப்பார் என வெளியான செய்திகளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இந்த மூன்று அமைச்சுக்களின் விவகாரங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்றும் - அவற்றில் ஒன்றைக கூட திரும்பக் கையளிக்கும் கேள்விக்கு இடமில்லை என்றும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த மூன்று அமைச்சுக்களினதும் செயற்பாடுகள் நன்கு ஆராயப்பட்ட பின்னரே அவை பொறுப்பேற்கப் பட்டன எனவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ-9)

# வவுனியா வாடி வீட்டில் இயங்கிய மதுவிற்பனை நிலையத்துக்கு 'சீல்'

வவுனியா,நவ.11

வவுனியா வாடி வீட்டின் மதுபான சாலை 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சட்டப்படி பௌர்ணமி தினத்தில் மதுவிற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று வாடி வீட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்கு வவுனியா மாவட்ட நீதிவான் சென்றுள்ளார். அப்போது அங்கு மறைமுகமாக மது விற்பனை நடைபெற்றுள்ளமை தெரியவந்தது.

இதனை அவதானித்த நீதிவான் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி மதுவிற்பனை நிலையத்தை 'சீல்' வைக்க உத்தரவு பிறப்பித்தார்.

வாடி வீடு அமைந்துள்ள இடத்தில் இருந்து மிக அண்மையில் இரண்டு சோதனைச்சாவடிகள் அமைந்துள்ளன. எனினும், இது தொடர்பாக பொலீஸார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன்.

இது தொடர்பாக விசாரணை நடத்துமாறும் நீதிவான் கட்டளை பிறப்பித்துள்ளார். (எ-164)

# 'ஹெரோயின்' வைத்திருந்த விமானப்படை வீரர் கைது!

## பொல்காவலையில் சனியன்று சம்பவம்

வவுனியா,நவ.11

"ஹெரோயின்" போதைப் பொருள வைத்திருந்த விமானப்படை வீரர் ஒருவரை விசேட குற்றத் தடுப்புப் பொலீஸார் நேற்றுமுன்தினம் பொல்காவலையில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொல்காவலையைச் சேர்ந்த அருண் பிரசன்னா என்ற விமானப் படை வீரரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர், வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், சந்தேக நபருக்கு எவ்வாறு போதைப் பொருள் கிடைத்தது என்பது குறித்தும் விசாரணை செய்யுமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-9-164)

# சட்டவிரோத பொருள்களால் நிறையும் நீதிமன்ற வளாகம்

கொழும்பு,நவ.11

சட்டவிரோத முறையில் ஏற்றிச் செல்லப்பட்ட சமயம் பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட மணல், மரங்கள், விறகுகள் என்பவற்றால் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளாகம் நிரம்பி வழிகின்றது.

ஏற்கனவே பெரும் இடநெருக்கடிகளுக்கு மத்தியில் சிறிய கட்டடம் ஒன்றில் இயங்கிவருகிறது மல்லாகம் நீதிமன்றம். தற்போது நீதிமன்ற வளாகமும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனால், நீதிமன்றத் தேவைகளின் பொருட்டும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டும் நீதிமன்றுக்கு வரும் வாகனங்களை வீதிகளிலும் நீதிமன்ற நுழைவாயிலிலும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.(ம-150)

# யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடரப்பட வேண்டும்

**முன்னர் தமிழர்கள் - சிங்களவர்கள், பெரும்பான்மையினர் - சிறுபான்மையினர் என்ற நோக்கில் இந்நாட்டில் நிலவிய உணர்வுகள் தற்போது யுத்தம்வேண்டாம் என்ற அளவிற்கு மாற்றமடைந்துள்ளன. இந்த நிலைப்பாட்டை ஓரிரு ஊடகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஊடகங்களும் கொண்டுள்ளன. இதற்கு உதாரணமாக 'லங்காதீப' நாளிதழில் சமீபத்தில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தைக் குறிப்பிடலாம். இதனைச் சிங்கள மக்களின் சிந்தனை மாற்றமாகவும் கருதமுடியும். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

போர்நிறுத்த உடன்படிக்கை, மாற்றங்கள் எதுவுமின்றித் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் எனவும், மீண்டும் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பகையுணர்வு உருவாகும் நோக்கம் தமக்குக் கிடையாதெனவும் ஜனாதிபதி தெளிவுபடத் தெரிவித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. கடந்த 5 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் தற்போதைய சிரேஷ்ட ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் இத்தகவலை வெளியிட்டதாக கடந்த 6 ஆம் திகதி செய்தி வெளியாகியிருந்தது. இச்செய்தி நிச்சயமாக சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாகும்.

கடந்த 4 ஆம் திகதியன்று அமைச்சரவையைச் சேர்ந்த 3 அமைச்சர்களை அவர்களது பதவியினின்றும் அகற்றி, அவர்கள் வசமிருந்த அமைச்சுப் பொறுப்புக்களை தன்வசம் எடுத்துக்கொள்வதற்கும், நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதற்கும் மற்றும் நாடுமுழுவதற்குமான அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தவும் ஜனாதிபதி தீர்மானித்ததை அடுத்து நாடுபூராவும் நிச்சயமற்ற தொரு நிலைமை உருவாகியுள்ளமை குறித்து விசேடமாக குறிப்பிடவேண்டியது அவசியமல்ல.

வெளிவந்த தகவல்களின்படி ஜனாதிபதியின் இந்தத் திடீர் தீர்மானம் போர் நிறுத்தத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென சிலரது மனதில் சந்தேகத்தை உருவாக்கியிருந்ததாகத் தோன்றியது. தற்போது கதிர்காமர் வெளியிட்ட அறிக்கை காரணமாக அவ்வித சந்தேகத்திற்கு இடமில்லாது போயுள்ளது. அவரது கருத்துக்கள் புத்திசாலித்தனமும், உறுதிப்பாடும்கொண்ட தெளிவான கருத்துக்களாக அமைந்திருந்தன. போர்நிறுத்தம் தொடர்ந்தும் உரியமுறையில் கடைப்பிடிக்கப்படும் என ஜனாதிபதி வழங்கிய உறுதிப்பாடு குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராலும் அவதானிக்கப்பட்டதாக கடந்த 6 ஆம் திகதி வெளிவந்த மற்றொரு செய்திமூலம் தெரிந்துகொள்ளமுடிகிறது. இதுதொடர்பாக கதிர்காமரால் வெளியிடப்பட்ட அறிக்கையையும் யுத்தநிறுத்தக் குழு கவனத்தில் கொண்டதாக அக்குழுவின் செய்தித்தொடர்பாளர் அக்னஸ் பிறகடோவிர் அம்மையார் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திடீரென உருவான இச்சூழ்நிலையால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஒருவிதத்தில் குழப்பமடைந்திருந்த போதிலும் கதிர்காமரின் இவ்அறிக்கை தம்மிடையே நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளதாக அச்செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளர்கள் மத்தியில் மட்டுமின்றி கதிர்காமரின் இந்த அறிக்கையால் நாட்டின் சகல பொது மக்கள் மத்தியிலும் நம்பிக்கை உருவாகியுள்ளதாகக் கூறமுடியும் சந்தேகங்களை ஒருபுறம் ஒதுக்கிவைத்து யதார்த்தநிலைமையை தெளிவாகப் புரிந்துகொள்ளமுயற்சிப்பது இன்றைய நமது பொறுப்பாகும்.

கடந்த 6 ஆம் திகதி வெளியான மற்றொரு செய்தியின்படி விடுதலைப் புலிகள் அமைப்பும் மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க அக்கறை காட்டமாட்டாதென விடுதலைப் புலிகள் அமைப்பின் சமாதானச் செயலகத்தின் அறிக்கை தெரிவித்திருப்பதாகத் தெரியவந்தது. இச்செய்தியும் சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருந்த போதிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக்கொள்ளப்போவதில்லை என அந்த அமைப்பின் சமாதானச் செயலகம் உறுதிப்படுத்தியுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது. தற்போதைய அரசியல் நிலைகுறித்து விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் இதுவரை எவ்வித கருத்தும் வெளியிடவில்லை. ஆயினும், அவரது ஒப்புதல் இன்றி விடுதலைப் புலிகள் அமைப்பின் சமாதானச் செயலகம் இவ்விதகருத்தை வெளியிட்டிருக்கும் எனக் கருத இயலாது.

இப்போர்நிறுத்தம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. ஆயினும், அன்றுமுதல் இற்றைவரை பலதரப்பட்ட சாதகமான, பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றிருப்பினும் இப்போர்நிறுத்தம் இற்றைவரை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கவிடயமாகும். இருதசாப்த காலமாக நிலவி வந்த கடும் விரோதப் போக்குமிக்க யுத்தநிலைமையிலும் இப்போர்தவிர்ப்பு இலக்கு இதுவரையும் அமைதியான வகையில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கவிடயமாகும். பல ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த குண்டுச்சத்தம், துப்பாக்கி ஓசை மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளின் ஒலி இன்று கேட்கமுடிவதில்லை.

நிலக்கண்ணிவெடியோ, மிதிவெடியோ வெடிப்பதால் ஏற்படும் இழப்புகள் குறித்த செய்திகள் எதுவும் வெளியாவதில்லை. பாரிய தாக்குதல் சம்பவம் எவற்றினாலும் உயிர்ச்சேதங்கள நிகழ்வதில்லை. போர்முனையில உயிரிழக்கும் இராணுவவீரரின் சடலங்கள் அவர்களது சொந்தக் கிராமப்புறங்களுக்கு சவப் பெட்டியில் எடுத்துச் செல்லப்படுவதில்லை. இப்போர்நிறுத்தம் காரணமாக இந்நிகழ்வுகள் யாவும் முழுமையாக அற்றுப்போயுள்ளன. விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் மக்களும் இன்று அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டுவருகின்றனர். தலைநகர் கொழும்புபோன்று முக்கிய நகரங்களில் இடம்பெற்று வந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவங்கள் யாவும் யுத்தநிறுத்தம் காரணமாக இடம்பெறுவதில்லை. சகலரும் சந்தேகமோ அச்சமோ இன்றி வாழ்வதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. இவ்வித சூழ்நிலை மாற்றத்திற்கான காரணமாய் அமைவது இந்த யுத்தநிறுத்தமேயாகும்.

பொருளாதார ரீதியிலும் நாடு தன்நிறைவு அடைவதற்கான பின்புலம் உருவாகி வருகின்றது என்பது குறித்து எவ்வித சந்தேகமுமில்லை. அச்சமும் சந்தேகமும் நிலவிய யுத்தகாலத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விவசாய உற்பத்தித்துறை நடவடிக்கைகள் பெரியளவில் பாதிப்புக்குள்ளாகியிருந்தன. இன்று அச்சமோ சந்தேகமோ இன்றி விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்திருப்பதன் காரணமாகத் தமது வயல்களில் பெரும் அறுவடையை பெற்றுக்கொள்ளக்கூடியதாய் உள்ளது. இப்போர்நிறுத்தத்திற்கு முன்னர் பெரும்பாலான எல்லைப் பகுதி விவசாயிகள் தமது ஒரு கையில் மண்வெட்டி அல்லது கலப்பையையும் மறுகையில் பாதுகாப்புக் கைத் துப்பாக்கியையும் ஏந்தியவாறே தமது வயல் நிலங்களுக்குச் சென்றதைக் காணமுடிந்தது. இப்போர் நிறுத்தத்தை அடுத்து அந்தநிலையில பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தால் எவருக்கும் எப்பலனும் கிட்டுவதில்லை. அத்தோடு, தேசியத் தன்னிறைவும் எட்டமுடியாது போய்விடும். வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு பிரச்சினைகள் பல உள்ளன என்பதும் உண்மையே. தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல அப்பகுதிகளில் வாழும் சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. சிறுபான்மையின மக்களுக்கு நியாயமான வகையில் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் நிர்வாகத்தில் பங்குகொள்ளத் தேவையான வசதிவாய்ப்புக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான முக்கியகாரணம் இவை தொடர்பாக நியாயமாக நடந்துகொள்ளாமையே எனவும் கூறப்படுகிறது. இந்நாட்டில் வாழும் பல்லினச் சமூகங்களுக்கு நாடு சுதந்திரமடைந்ததன் பின் ஆட்சிசெய்த எந்த ஓர் அரசினாலும் ஜனநாயகரீதியிலான நியாயமான வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அரவிந்த்**

இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சமூகத்தினரையும் நியாயமான வகையில் நடத்துவதன்மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். அவ்வாறான நியாயமான தீர்வுக்கான ஒரே பாதை பேச்சு ஆகும் யுத்தத்தின்மூலம் அழிவுமட்டுமே ஈட்டப்படக்கூடியது. ஆகவே, இப்போர்நிறுத்தத்தை எவ்வித இடையூறும் இன்றி தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட சகல தரப்பினரின் பொறுப்பாகும். அதேவேளை, இவ்விடயத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் எதுவித பக்கச்சார்பின்றி கடமையாற்றவேண்டியதும் அவசியமாகும். இதுநாட்டுமக்களுக்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய கடமையாகும்.

# நெடுந்தீவுக் கடலில் றோலரில் தொழில் செய்வதை தடைசெய்க!

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், குருநகர் கடற்பரப்பில் இழுவைப் படகுகள் தொழில் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது போன்று, நெடுந்தீவுக் கடற்பகுதியிலும் இழுவை படகுகள் தொழில் செய்வது தடை செய்யப்படவேண்டும் என மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் ச.பேரானந்தம் தலைமையில் நெடுந்தீவுப் பகுதிக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நெடுந்தீவுக் கடலில் மீண்டும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் தொழிலுக்கு வருவதாகவும் -

எனினும் உரிய தரப்பினர் இது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறிய சங்கப் பிரதி நிதிகள் தற்சமயம், குருநகர் பகுதியைச் சேர்ந்த இழுவைப்படகுகள் ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனையில் இருந்து நெடுந்தீவுக் கடல்பகுதியில் வந்து தொழில் செய்வதால், பகுதி நேர மீனவர்களும் சிறு தொழில் மீனவர்களும் பாதிக்கப்படுவதாகவும் கூறினர்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-111)

---


## ஓராண்டு நினைவஞ்சலி

நீள்நில வருகை 30 - 04 - 1932



நிமலனடி சேர்கை 11 - 11 - 2002

### திருமதி திரேசா நாகம்மா

*உதிர்ந்து கிடக்கும் உன் உதிரச் செடிகளின்*
*விழிநீர் துடைக்க மறந்து விரைந்த தாயே!*
*சிதைந்த இதயத்தின் புலம்பலுக்குள்*
*ஓடிவிட்டதம்மா ஒரு வருடம்!*

நினைவகலாத் துயருடன்:
**அன்புச் சகோதரர்கள், மக்கள், மருமக்கள்.**

*இல.105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (24582) (26-17-14)

---

## 10ஆம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு 31 - 05 - 1967



இறப்பு 11 - 11 - 1993

### அமரர் நவரெத்தினம் விக்னராஜன்

பத்தாண்டுகள் பஞ்சாய்ப் பறந்தோடி விட்டனவே!
முத்தான நினைவுகள் மட்டும் மறக்க முடியவில்லை
பித்தாகிப் போனதே எம் நெஞ்சு விக்னராஜனே!
எத்தாலுமுன்னை நினைந்தே இங்கு நாம் வாழ்கின்றோம்.

நல்லூர். (24578)(35-14-17) பெற்றோரும் நண்பர்களும்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 17 - 05 - 1929



விண்ணகம் 27 - 11 - 2002

திதி: 11.11.2003

### அமரர் முத்தையா செல்லத்தம்பி (J.P.)

(ஓய்வுபெற்ற M.L.T., நல்லூர் ஓய்வூதியர் சங்கச் செயலாளர், நல்லூர் 12/12A கிளைக்குழு உறுப்பினர், சமூக முன்னேற்றக்கழக ஆயுட்கால உறுப்பினர், செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சங்கப் போஷகர்)

அவனியில் எம்மைச் சிறப்புற வாழ வைத்த
அன்புத் தந்தையே!
தங்கள் சகபாடிகள் எல்லோரும் சேவை
தேடி நிற்கிறார்களே,
எங்கு சென்றீர்கள், மறவோம் உங்கள்
சேவையை?

*63,சங்கிலியன் வீதி, நல்லூர்.* (24575) (26-14-17) - குடும்பத்தினர்.

---

## மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**

யாழ்ப்பாணத்தில் 11.11.2003 - 16.11.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(தயவுசெய்து முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-31180) (15-34)

---



உ
சிவமயம்

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசித் திங்கள் 26 ஆம் நாள் (12.11.2003) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் வரும் சுபவேளையில்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எமது செல்வப் புதல்வி

### செல்வி அமனா

அவர்களுக்கு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பூப்புனித நீராட்டு விழா செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள அவரது இல்லத்தில் சிறப்பாக நடத்துவதற்கு திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

※ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் வரவை விரும்பும்:
**திரு.த.அகிலேந்திரா ஐயர், திருமதி அ.இரத்தினகுமாரி குடும்பத்தினர்.**

*செல்வச் சந்நிதி, தொண்டைமனாறு.* (24579)(34-17-14)

---

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

புவியில் 1979 11 04



இறையில் 2003 09 28

அமரர்
### சண்முகநாதன் செந்தில்நாதன் (செந்தில்) அவர்கள்

(இறையடி இணைந்தமை குறித்த இரங்கல் அஞ்சலி)

திதிவெண்பா
கேர் சுபானுவாண்டு கன்னித்திங்கள் ஞாயிறு
கார் பூர்வபட்ச திருதியை - பேராளன்
பேர் சண்முகநாதன் செந்தில்நாத பெரியோன்
கார் நாள் சிவன்தாள்.

ஆசிரியப்பா
துடிப்பும் மிடுக்கும் தூயசிந்தையும்
எடுப்பான சேவையும் மிடுக்கான கொள்கையும்
அரியன பெரியன ஆராய்ந்தறிந்து
உரிய நிறுவனத்தில் உன் ஒப்பில்லாச் சேவை
பெரிதும் உழைத்த பெரியோன் செந்தில்

இனிய உந்தன் பெரிய நற்சேவையை
வெளியோட அகாலத்தில் எடுத்தான் கணினியான்
உற்றார் மற்றார் உறவினர் அயலார்
உன் நிறுவன சேவையர் மாநில நண்பர்
உற்றுற கண்கள் நற்செகு, குளமாக
உள்ளம் வெதும்பி கூறுவதறியாது
வெந்தே, நின் பிரிவால் வேதனைத் தீயில்
நொந்தே சாகிறார் எந்தையே செந்தில்
உந்தன் நற்சேவையை என்றும் எம்மிதயம்
நன்றாக எண்ணும் நற்றவச் செந்திலே!
அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


றூபா பன்முக வர்த்தகம், யாழ்ப்பாணம்.
சிறி விக்கினேஸ்வரா களஞ்சியம், சாவகச்சேரி.
தும்பிக்கையான் களஞ்சியம், கிளிநொச்சி.

(24521) (30-35-14-17)

உரிமையாளர்களும், ஊழியர்களும்.

# திமிங்கல சுறா (WHALE SHARK)

கடந்த வெள்ளியன்று குடாக்கடலில் வைத்து கொல்லப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்ட இராட்சத மீன் தொடர்பான புதிய தகவல்களை கடற்றொழில் பரிசோதகர் ஒருவர் வெளியிட்டிருக்கின்றார். அந்த விவரங்கள் இங்கு வெளியிடப்படுகின்றன.




07.11.2003 அன்று குருநகர் கரையோரப் பிரதேசத்தில் கரையொதுங்கிய ஆழ்கடல் உயிரினமானது ஆராய்ச்சிகளின் பிரகாரம் பின்வரும் உண்மையான தகவல்கள் அறியப்பட்டன. அதன் விவரம் வருமாறு:-

இதன் பெயர்:- திமிங்கல சுறா (WHALE SHARK)
நிறம்:- கருமை, சாம்பல் - வெள்ளைப் புள்ளிகள்
இதன் நீளம்:- 9அடி (வால் செட்டை தவிர்ந்து)
மொத்த நீளம்:- 13 அடி (வால் சட்டை சேர்த்து)
முதலாவது முதுகு செட்டையின் உயரம்:- 32 அங்குலம்
இரண்டாவது முதுகு செட்டையின் உயரம்:- 22 அங்குலம்
வால்செட்டை 1) மேல்தளத்து வால்:- 46 அங்குலம்
2) கீழ்தளத்து வால்:- 25 அங்குலம்
பக்க செட்டை:- 39 அங்குலம்
முதலாவது பூப்பிளவின் நீளம்:- 9 அங்குலம்
வாய் நீளம்:- 3 அடி
இரண்டு கண்களுக்கிடையிலான அகலம்:- 3அடி 9"



இந்த மீன் இனமானது ஆராய்ச்சிகளின் பிரகாரம் பின்வரும் தன்மைகளைக் கொண்டுள்ளது.

கடலில் இது அரிதாகவே காணப்படும். பரந்த குளிர் தன்மையான கடலில் வாழும் மீன் வர்க்கத்தில் இது பெரியதாகும். ஏறத்தாழ 18 மீற்றர் நீளமானது. இது மெதுமையான தன்மையுடைய உணவை, உதாரணமாக, கடல்வாழ் சிறுபிராணிகள், பிளாந்தங்கள், கணவாய் கூட்டம், சாடின் மீன் கூட்டம், அஞ்சுப் தேரை என்பனவற்றை உண்ணும். கோபம் கொள்ளாது. ஆபத்தை விளைவிக்காது. சுழியோடிகளை அணைத்துக் கொண்டு செல்லும். இது கோபம் கொண்டால் ஆழ்கடலின் அடிப் பகுதிக்குச் சென்று விடும். சுழியோடிகள் இதன் அருகில் செல்வதால் ஏனைய மாமிசம் உண்ணும் மீன், சுறா இனங்களிடம் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

**எம்.பி.அன்றா**
கடற்றொழில் பரிசோதகர்,
ஊர்காவற்றுறை.

## நாரந்தனை படுகொலை வழக்கு:
# எதிர்த்தரப்புச் சாட்சியங்கள் 13ஆம் திகதி பதிவுசெய்யப்படும்

யாழ்ப்பாணம்,நவ.11

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் பிரசாரப் பணிக்காக தீவகம் நோக்கிச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கில் எதிரிகள் சார்பிலான சாட்சிகளின் சாட்சியங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி பதியப்படவுள்ளன.

இந்த வழக்கு விசாரணைகள் கடந்த வெள்ளியன்று மீண்டும் யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்றன.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி.ஸ்ரீராஜேஸ்வரன் தமது பிரேத பரிசோதனை அறிக்கையை மன்றில் சமர்ப்பித்து சாட்சியம் அளித்தார்.

இதையடுத்து அரச தரப்புச் சாட்சியங்கள் பூர்த்தியடைந்துவிட்டன என அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி தெரிவித்தார்.

எதிரிகள் தரப்பில் தமது சாட்சியங்களையும் பதிவுசெய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து எதிர்வரும் 13ஆம் திகதி முதல் எதிர்த்தரப்பு சாட்சியங்களை பதிவுசெய்ய நீதிவான் அனுமதித்தார். (ம-3-5)

# 489 பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லையாம்!

## கல்வி அமைச்சு திடுக்கிடும் தகவல்

கொழும்பு,நவ.11

அடுத்த ஆண்டு முதலாம் தரத்தில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டபோதிலும் 489 பாடசாலைகளுக்கு எந்தவொரு விண்ணப்பப்படிவமும் கிடைக்கவில்லை எனக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவற்றுள் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 62 பாடசாலைகள் அடங்குகின்றன என்றும் -

கம்பஹா மாவட்டத்தில் நிலைமை இவ்வாறு இருக்கையில், கண்டி, குருநாகல், காலி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றுக்கு பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், குறிப்பிட்ட பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான அனுமதி விண்ணப்பங்கள் எவையும் கிடைக்காமைக்கு அந்தப் பகுதிகளில் சனச் செறிவு குறைந்துள்ளதே காரணம் எனக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

# குளம், வாய்க்கால் புனரமைப்பு பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிவுறும்!

## கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

உலக உணவுத் திட்டத்தின்கீழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் குளங்கள், வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

யாழ். கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்த ஆண்டு இறுதிக்குள் 48 திட்டங்களை உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டது.

இவற்றில் இதுவரை 39 புனரமைப்பு வேலைத் திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

மிகுதியாகவுள்ள 9 வேலைத் திட்டங்களையும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்திசெய்வதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வேதனமாக ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 107 மனிதவலு உலர் உணவுகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி-7)

## பொதுமக்கள் பொருத்திய வீதி விளக்குகள்

கோப்பாய்,நவ.11

கோப்பாய் பகுதியில் உள்ள சில வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் அப்பகுதி மக்களால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மிகவும் இருள் சூழ்ந்து காணப்படும் வீதிகளுக்கும், ஒழுங்கைகளுக்குமே இந்த விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-10-72)

## பாதீனியம் ஒழிப்பு

கோப்பாய்,நவ.11

கோப்பாய் பிரதேசத்தில் பாதீனியக் களைகள் அழிக்கும் பணியில் கோபபாய் வடக்கு - மத்தி விவசாய சம்மேளனத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் சுழற்சி முறையில் இவ்வாறு ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (எ-10-72)

## விறகுக்காக சவுக்குமரம் தறிப்பு

வடமராட்சி,நவ.11

வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளில் சவுக்குமரங்கள் விறகுக்காக வெட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் இவ்வாறு மரங்களை வெட்டுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பருத்தித்துறைப் பொலீஸாரும் அறிவித்துள்ளனர். (எ-10-173)

## கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

மாதகல்,நவ.11

மாதகல் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்கும்படி மாதகல் விவசாய சம்மேளனத்தினால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல் வயல்களில் பிரவேசித்துப் பயிர்களை அழிக்கும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டுத் தண்டப்பணம் அறவிடப்படும் என்று சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-10-95)

## முன்பள்ளிக்கு உதவிகள்

மாதகல்,நவ.11

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு நிறுவனம் ஆகியன இணைந்து மாதகல் புனித தோமையார் முன்பள்ளிக்கு பாடநூல்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளன. (எ-10-95)

# ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம் ஆசிரியர்களின்றி மூடப்படும் அபாயம்!

புத்தளம்,நவ.11

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பாடசாலையொன்றை மூட வேண்டிய துர்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டம் - உடப்பு பகுதியில் உள்ள ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்திற்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி கற்றுவரும் மேற்படி பாடசாலையில் 48 ஆசிரியர்கள் கடமையாற்றவேண்டும். ஆனால், தற்போது 18 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த ஏழு ஆண்டுகளாக ஆங்கில ஆசிரியர் எவரும் இந்தப் பாடசாலைக்கு நியமனம் செய்யப்படவில்லை.

கடந்த ஜூன் மாதம் விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் இந்தப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். எனினும், அவர் இரண்டு மாதங்களில் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பாடசாலையில் கடமையாற்றுபவர்களில் அநேகர் தொண்டர் ஆசிரியர்கள் என்றும் -

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படுகின்றது என்றும் -

இந்தப் பாடசாலைக்கு தேவையான நிரந்தர ஆசிரியர்களை நியமிக்குமாறும் - அன்றேல் பாடசாலையை மூடிவிட்டு, மாணவர்களை வேறு பாடசாலைகளில் இணைக்குமாறும் - பாடசாலை அபிவிருத்திச்சபை கோரிக்கை விடுத்துள்ளது. (எ-ரி-186)

# இப்படியும் ஒரு பாடசாலை



மாலபே தர்மாசோக வித்தியாலயம் கொழும்பு மாவட்டத்தில் அதுவும் நாடாளுமன்றத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ளது. அந்தப் பாடசாலையில் மொத்தம் 13 மாணவர்கள் மட்டுமே கல்வி பயில்கின்றனர். ஆசிரியர் ஒருவர் மட்டுமே கற்பிக்கின்றார். 2004ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கான அனுமதிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. புதுமை என்னவெனில், கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அமைப்பாளராகப் பணியாற்றும் கடுவெலத் தொகுதியிலேயே இந்தப் பாடசாலை அமைந்துள்ளது. படத்தில் அப்பாடசாலையின் ஆசிரியரையும் மாணவர்களில் எண்மரையும் காணலாம். அதே சமயம் வடக்கிலும் கிழக்கிலும் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் படிப்பதற்குக் கட்டடம் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சைவ பரிபாலன சபைக்கு புதிய நிர்வாக சபை

யாழ்ப்பாணம்,நவ.11

சைவ பரிபாலன சபையின் நடப்பு வருடத் தலைவராக சைவப்புலவர் வ.கந்தசாமியும், செயலாளராக சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும், பொருளாளராக வி.தயாபரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவர், உதவிச் செயலாளர், மேலதிக உதவிச் செயலாளர், பரீட்சைச் செயலாளர், சமயப் பிரசார அமைச்சர் ஆகிய பதவிகளுக்கும் அறுவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-10)

## பஸ் சேவையை விரிவுபடுத்த ஏற்பாடு

நெடுந்தீவு,நவ.11

நெடுந்தீவு கிழக்குப் பகுதி மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு அப்பகுதிக்கும் பஸ்சேவையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கிழக்குப் பகுதிக்கான வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் அப்பிரதேச கிராம அலுவலர்களைக் கேட்டுள்ளார். (எ-10-111)

## பொன்னாலையில் இராஜகோபுரம்

சண்டிலிப்பாய்,நவ.11

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஒன்பது தளங்களைக் கொண்ட புதிய இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

93 அடி உயரமுடைய இந்த இராஜகோபுரத்தில் சிற்பங்களை அமைப்பதற்கு இந்தியாவில் இருந்து சிற்பக் கலைஞர்கள் வருகை தரவுள்ளனர். (எ-10-135)

## காவலாளிகளுக்கு கொட்டகைகள்

யாழ்ப்பாணம்,நவ.11

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பணியாற்றும் காவலாளிகளுக்கென மூன்று சிறிய கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை அலுவலகம், திருநெல்வேலி பொதுச் சந்தை, கொக்குவில் உப அலுவலகம் ஆகியவற்றிலேயே இந்தக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. (எ-10-6)

## மாசேரியில் சங்கக் கிளை திறப்பு

வரணி,நவ.11

கொடிகாமம் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று மாசேரி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (எ-10-170)

## பாலம் அமைக்குமாறு கோரிக்கை

வரணி,நவ.11

வரணி வடக்கில் உள்ள சிமிழ் அம்பாள் ஆலயப் பகுதியில் பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள வாய்க்கால் அண்மையில் ஆழமாக்கப்பட்டதை அடுத்தே மக்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

முன்னர் இந்த வாய்க்கால் சிறிதாக இருந்தமையால் மக்கள் இதனைக் கடந்து செல்லக் கூடியதாக இருந்தது என்றும் - கூறப்பட்டது. (எ-10-170)

## சிறந்த முதியோர் இல்லம் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.11

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் வடக்கு - கிழக்கில் சிறந்த முதியோர் இல்லமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் 32 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

## பாவனைப்பொருள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து நல்லூர் பிரதேச சபைக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் 2 லட்சத்து 19 ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிளாஸ்ரிக் கதிரைகள், அலுமாரிகள் உள்ளிட்ட இந்தப் பொருள்கள் யாவும் சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதாக சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-10-6)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
# 2004ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்
## (பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக்கடைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 21.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 14.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இருபிரதிகளை "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்கமுடியாத படிவக் கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 20.11.2003ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்துகொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி நிரப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நேரத்துக்கு முன்னராக சபைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் ½ பங்கைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும்.

குறிப்பு:-

1. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கருவாட்டுக்கடை, கோழிக்கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் மூன்றுமாத வாடகையுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரியும் செலுத்தப்பட வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்குவரும் பொருள்களின் பெறுமதியின் 3% இற்கு மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 2.00 இற்கும், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 3.00 இற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகைக்குப் புறம்பாக அத்தொகையின் 20% வற் வரியாக செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரத் தொகையுடன் அதற்குரிய 20% வற் வரி செலுத்தப்படல் வேண்டும்.
6. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| இல. | சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7,500.00 | 3,108,000.00 | - |
| 02. | உடுவில் கீரிச்சந்தை | 200.00 | 1,500.00 | 68,475.00 | - |
| 03. | உடுவில் ஆலடிச்சந்தை | 200.00 | 500.00 | 5,000.00 | - |
| 04. | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2,500.00 | 751,300.00 | 100.00 |
| 05. | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 116,000.00 | 100.00 |
| 06. | கருவாட்டுக்கடை இல. 03 | 100.00 | 500.00 | 12,200.00 | 60.00 |
| 07. | கருவாட்டுக்கடை இல. 04 | 100.00 | 500.00 | 11,500.00 | 60.00 |
| 08. | கருவாட்டுக்கடை இல. 05 | 100.00 | 500.00 | 11,500.00 | 60.00 |
| 09. | கோழிக்கடை இல. 06 | 100.00 | 500.00 | 5,000.00 | 60.00 |
| 10. | கோழிக்கடை இல. 07 | 100.00 | 500.00 | 5,300.00 | 60.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01. | மருதனார்மடம் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7,500.00 | 2,846,500.00 | - |
| 02. | இணுவில் பொதுச்சந்தை | 200.00 | 2,000.00 | 48,600.00 | - |
| 03. | மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 64,500.00 | - |
| 04. | தாவடி ஆட்டிறைச்சிக்கடை | 200.00 | 2,000.00 | 45,000.00 | - |
| 05. | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 200.00 | 2,000.00 | 19,900.00 | 100.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01. | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 2,000.00 | 56,700.00 | - |
| 02. | ஏழாலைச் சந்தை | 150.00 | 1,500.00 | 14,000.00 | - |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
2003.11.07 (C/3122?) (25-15-12)

திருமதி எ.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

# முக்கிய அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் அவர்களால் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 22.11.2000ஆம் திகதிய 1159/22 இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் 'ஆ' பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கமைவாக இப்பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்குச் சுமத்தப்பட்டுள்ளது.

ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடனோ/உபபணிமனைகளுடனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 01.01.2004 முதல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரம் சகல உப பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

11.11.2003

ந.பாலச்சந்திரன்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

(சி-31228) (30)

# யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை
## 2004 ஆம் ஆண்டு அனுமதி

விண்ணப்ப முடிவு திகதி : 14-11-2003
அனுமதிப் பரீட்சை : 29-11-2003

(தரம் 06 முதல் தரம் 11 வரை)

- அதிபர்.

(24598)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்
சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றும்
செல்வி எல்.எம்.லியோனிற்றா அவர்களின் அன்புத் தந்தையாரான

## ஞானப்பிரகாசம் லீனஸ்ரட்ணம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்களும்.

உதவி அரச அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை. (25-15-12)

(24594)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நக்கர லேன், கண்டிக்குளியை வதிவிடமாகவும் கொண்ட



திரு.
**ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் ஜே.பி.**
(யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை)

அவர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் 10.11.2003 இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவான் ஆக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் இவர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவரும், விவசாய டிப்ளோமாதாரியும், தென்னைச் செய்கை நூலின் நூலாசிரியரும், கைதடி சாவகச்சேரி, அம்பன் கமநல சேவைக்குழு உறுப்பினரும், சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். இப்பிரதேச மக்களுக்கு தென்னை அபிவிருத்தி சேவையுடன், இப்பதவி மூலம் அவரது சமூகசேவைகள் இன்னும்தொடரவும் மேன்மேலும் வளரவும் இறையாசி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

சி.சிவசந்திரன்,
பிராந்திய முகாமையாளரும், தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை - சக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

பிராந்தியக் காரியாலயம்,
34, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (24592)

# புதிய உயர் கல்லூரி புத்தகசாலை

புத்தக விற்பனையும்,
மலிவு விற்பனையும்

இன்று 11.11.2003 முதல் 16.11.2003 வரை.

எமது ஒன்றியத்தினால் இந்தியாவில் இருந்த தருவிக்கப்பட்ட

1. அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடுகள்
2. தேவநேயப் பாவாணர் நூல்கள்
3. வாழ்வியல் களஞ்சியம்
4. அறிவியல் களஞ்சியம்
5. மருத்துவ நூல்கள்
6. பண்பாட்டு மானிடவியல்

ஆகிய நூல்கள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. மலிவு விற்பனைப் பகுதியில் 40% வரையான கழிவுகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஆரியகுளம் சந்தி. (24593)(34-12-15) - யாழ்ப்பாணம்.





யாழ். பல்கலைக்கழக அரச ஒன்றியத்தின் ஆதரவுடன் கல்வியியல் வெளியீட்டு நிலையம் நடத்திய 'கல்வியியலாளன்' ஆய்வு நூல் வெளியீட்டு விழா கடந்த சனியன்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ரீ.கமலநாதன் வெளியிட்டு வைக்க யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ்.தியாகலிங்கம் பெற்றுக் கொள்வதை முதலாவது படத்திலும் - நூல் வெளியீட்டில் கலந்துகொண்ட துணைவேந்தர் சு.மோகனதாஸ், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சபா. ஜெயராசா மற்றும் கல்வியியலாளர்களை இரண்டாது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)*

## மோ.சைக்கிள் மோதி பாதசாரி படுகாயம்!

தென்மராட்சி,நவ.11

மோட்டார் சைக்கிள் மோதி பாதசாரி காயமடைந்த சம்பவம் கடந்த சனியன்று பகல் சாவகச்சேரி நகரில் இடம்பெற்றது.

மழைபெய்து கொண்டிருந்த வேளையில் குடைபிடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த போதே வீதியோரத்தில் நடந்து வந்தவரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த கதிரவேலு மருதலிங்கம் (வயது 54) என்னும் வர்த்தகரே விபத்தில் சிக்கி கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (எ-117)

# அபிவிருத்திப் பணிகளுக்கு வசதியாக தென்மராட்சி கிராம சங்கங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,நவ.9

தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்கு அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் தேவையைக் கருத்தில் கொண்டு தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் போன்றன புனரமைக்கப்பட்டும் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டும் வருகின்றன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் சு.உமாபாலன் இந்தப் பணியில் ஈடுபட்டுவருகிறார்.

பெருமளவு கிராம அலுவலர் பிரிவுகளில் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே இயங்கிய சங்கங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதத்தில் 15 மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் 3 கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. ஆறு மகளிர் அபிவிருத்திச் சங்கங்களும் இரண்டு கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

உசன், எழுதுமட்டுவாழ் வடக்கு, கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை, கல்வயல், நுணாவில் மேற்கு, மீசாலை தெற்கு, மந்துவில் கிழக்கு, கைதடி நாவற்குழி, மிருசுவில் தெற்கு, கைதடி மேற்கு, கைதடி நுணாவில், தென்மட்டுவில், இராமாவில், கைதடி தெற்கு ஆகிய மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் உசன், கல்வயல், மட்டுவில் வடக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

மாசேரி, கெற்பேலி, இடைக்குறிச்சி, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு, வரணி வடக்கு, கெற்பேலி, மட்டுவில் நுணாவில் ஆகிய கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## சரசாலை தெற்கில் வீடுகளை புனரமைக்க சிமெந்து கிடைத்தது

தென்மராட்சி,நவ.11

சரசாலை தெற்கு பகுதியில் 60 வீடுகள் அமைக்க கட்டடப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

யுத்த அனர்த்தங்களால் வீடுகள் சேதமடைந்த இந்த 60 குடும்பத்தவர்களும் இந்து சமய விவகார அமைச்சரைச் சந்தித்து உரையாடியதாகவும் -

இதையடுத்து வீடுகளின் ஆரம்ப கட்ட வேலைக்கென ஆயிரத்து முப்பது சிமெந்து பைக்கற்றுக்களை வழங்கிய அமைச்சர் -

அத்துடன் இதற்கான நிதியையும் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள ஞானவைரவர் ஆலய கட்டடப் புனருத்தாரண வேலைக்கும் நிதி வழங்குவதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எ-117)

## கைதடி – கோப்பாய் வீதியில் பாரிய குழியால் பெரும் சிரமம்

### போக்குவரத்து தடைப்படும் அபாயம்

தென்மராட்சி,நவ.11

கைதடி - கோப்பாய் வீதி விரைவில் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படலாமென இவ்வீதியைப் பயன்படுத்துவோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியில் ஏற்கனவே உடைந்திருந்த பாலத்தினை மூடிப் போடப்பட்டிருந்த கற்கள் உடைந்து பாரிய குழி ஏற்பட்டுள்ளதால் வாகனத்தில் வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இந்தக் குழிக்குள் மழை வெள்ளம் தேங்கி போக்குவரத்தினை தடை ஏற்படுத்தலாம் என்றும் - கூறப்பட்டது.

இவ்வீதியூடாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் பயணம் செய்வோர் பாலத்தை கடக்கும் வரை நடந்தே செல்ல வேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சிறுவர் மேம்பாடு பற்றி 3 நாள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். மாவட்டத்தில் சிறுவர்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை இனங்காணும் பொருட்டு யாழ். செயலகத்தில் மூன்றுநாள் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சிப் பட்டறையை யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

யாழ். குடாநாட்டில் சிறுவர்கள் தொடர்பான செயற்றிட்டங்களில் ஈடுபட்டுவரும் 25 இற்கும் மேற்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இப்பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றுகின்றனர்.

சிறுவர்களின் உளவியல் விடயங்கள், கட்டிளமைப் பருவத்திற்கான கல்வி மேம்பாடு, முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி ஆகிய அம்சங்கள் தொடர்பாக இப்பயிற்சிப்பட்டறையில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மாவீரர்தினத்தை சிறப்புடன் அனுஷ்டிக்க குழு நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.11

மாவீரர் தினத்தை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்கென 'மாவீரர் தின ஒழுங்கமைப்புக்குழு' ஒன்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

பிரதேசம், கோட்டம், ஊரகம் ரீதியாகவும், துறை சார்ந்த நிறுவனங்கள், அமைப்புக்கள் ரீதியாக கருத்தரங்குகள் எழுச்சிக் கூட்டங்கள் நடத்துவதும் -

அதன் மூலம் பொது மக்களை எழுச்சி அடையச்செய்வதும் இந்தக் குழுவின் செயற்பாடாக அமையும் என குழுவின் தலைவர் மா.இளம்பிறை தெரிவித்தார். (எ)

## தென்மராட்சிப் பகுதியில் ஒரே நாளில் ஏழுபேர் நாய்களால் கடியுண்டனர்

தென்மராட்சி,நவ.11

தென்மராட்சி பிரதேசத்தில் ஒரே நாளில் 11 பேர் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டனர்.

கடந்த 7 ஆம் திகதி வெவ்வேறு இடங்களில் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்ட ஏழு பேரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாலாவி தெற்கைச் சேர்ந்த த.துஷிதா (வயது 16), சரசாலை தெற்கைச் சேர்ந்த சி.முத்துக்குமார் (வயது 75), கெற்பேலியைச் சேர்ந்த வீ.கோபாலசிங்கம் (வயது 45), மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ச.சின்னையா (வயது 60), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செ.சின்னத்துரை (வயது 58), மீசாலை மேற்கைச் சேர்ந்த சி.தினேஷியா (வயது 9), மீசாலை வடக்கைச் சேர்ந்த ஜே.நிதுஷின் (வயது 9) ஆகியோரே நாய்களினால் கடியுண்டவர்களாவர். (ஐ-117)

## பொறுப்புக்களை கையளிக்க மறுக்கும் அதிபர்களின் பணிகள் இடைநிறுத்து!

கொழும்பு,நவ.11

தேசிய பாடசாலைகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் பணிகளை ஒப்படைக்க மறுக்கும் சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முன்னாள் அதிபர்களின் பணிகளை இடைநிறுத்தம் செய்யுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பி.கே.நாணயக்கார தேசியப் பாடசாலைகளின் பணிப்பாளர் பி.எச்.பி. கினகேக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேசியப் பாடசாலைகளுக்கும் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர்கள் தங்கள் பணிகளை பொறுப்பேற்கத் தத்தமது பாடசாலைகளுக்குச் சென்றபோதிலும், சில பாடசாலைகளின் முன்னாள் அதிபர்கள் புதிய அதிபரிடம் பொறுப்புக்களைக் கையளிக்க மறுத்துள்ளனர்.

இது குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வி அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாட்டை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

பொதுச்சேவை ஆணைக்குழுவால் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தேசியப் பாடசாலை அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, புதிய அதிபர்களின் நியமனங்களை எவரும் இலகுவில் பெற்றுவிடமுடியாது.

எனவே, இதற்கு உடன்படாது பொறுப்புக்களை கையளிக்க மறுக்கும் அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் உள்ளது.

## ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

ஊர்காவற்றுறை நகரில் அமைந்துள்ள ஆதிவைரவர் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. யுத்த சூழலால் பலத்த சேதமடைந்த இந்த ஆலயத்தை புனரமைக்க இந்து கலாசார அமைச்சு 50 ஆயிரம் ரூபாவை ஆலய நிர்வாகத்திடம் கையளித்துள்ளது.

## ஓய்வூதியக் கணிப்பீடு குறித்து செயலகத்தில் செயலமர்வு

### டிசெ.6முதல் 8வரை நடைபெறும்

ஓய்வூதியக் கணிப்பீடு மற்றும் ஓய்வூதியம் வழங்கல் ஆகிய செயற்பாடுகள் குறித்த மூன்று நாள் செயலமர்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இச்செயலமர்வில் ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்வது, ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் இருந்து வருகை தரும் அரச அதிகாரிகள் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு விளக்கமளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் உள்ள பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள்,ஓய்வூதியம் தொடர்பான வேலைகளைச் செய்யும் எழுதுவினைஞர்கள் பங்கு பற்றவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா அறிவித்துள்ளார். (எ-8)

## மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் 15ஆம் திகதி

2002/2003 (ஏ) கல்வியாண்டில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெற்ற மாணவர்களுக்கான 'மகாபொல' புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

'மகாபொல' புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவர்கள் தமக்குரிய அழைப்பிதழ்களைப் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

மருத்துவபீட மற்றும் விவசாயபீட மாணவர்கள் தத்தமது பீடங்களின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் அழைப்பிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவர்கள் அனைவரையும் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு முன்னர் கைலாசபதி கலையரங்கிற்குச் சமுகமளிக்குமாறும் உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார்.(ஐ-10)

## யாழ். பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்புவிழா ஜன.24 இல் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பொது பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜனவரிமாதம் 24 ஆம் திகதி பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணி தொடக்கம் மூன்று அமர்வுகளாக பட்டமளிப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் ஒவ்வொரு அமர்விலும் பட்டம் பெறுபவர்களுடைய எண்ணிக்கை குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், கௌரவ பட்டங்களைப் பெறுபவர்களுடைய விபரமும் இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (எ-4)

## பாக்.கிரிக்கெட் அணி வீரர்கள் தெரிவு விவகாரம்:

# இராஜினாமா செய்து விடுவேன்! ஜாவிட் மியாண்டட் எச்சரிக்கை!!

"பாகிஸ்தான் கிரிகெட் தேர்வுக் குழுத் தலைவர் அமீர் சொஹைல் தனது தன்னிச்சையான போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால் நான் இராஜினாமாச் செய்யத் தயங்கமாட்டேன்."

- இவ்வாறு கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ஜாவிட் மியாண்டட் எச்சரித்துள்ளார்.

நியூஸிலாந்துடனான ஒருநாள் போட்டிகளுக்கான 22 பேர் கொண்ட பாகிஸ்தான் குழாமில் முன்னாள் அணித் தலைவர்களான ரஷீட் லத்தீவ் மொய்ன் கான் மற்றும் சக்லைன் முஸ்தாக் ஆகியோர் சேர்க்கப்படவில்லை. கடந்த வியாழனன்று இக்குழாம் தெரிவுசெய்யப்பட்டது.

இத் தெரிவு தொடர்பாக பாக். அணித் தலைவர் இன்ஸமாம் உல் ஹக், பயிற்றுநர் ஜாவிட் மியான்டட் ஆகியோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இரு நாள்களாக மௌனம் சாதித்த ஜாவிட் மியாண்டட் நேற்றுமுன்தினம் பாக்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில தனது அதிருப்தியை வெளியிட்டார்.

"நியூஸிலாந்துடனான போட்டிக்கான 22 பேர் குழாம் தெரிவு தொடர்பாக என்னுடனோ, இன்ஸமாம் உல் ஹக்குடனோ தேர்வாளர்கள் எவரும் கலந்துரையாடவில்லை.

வீரர்களின் பட்டியல் ஊடகங்களுக்குச் சென்றபின்பே அதை நாம் அறிந்து கொண்டோம்.

பொதுமக்களின் வேண்டுகோள் காரணமாகவே மீண்டும் பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராவதற்கு சம்மதித்தேன். ஆனால், நான் அவசியமற்றவனெனக் கருதப்பட்டால் இராஜினாமாச செய்யத் தயங்கமாட்டேன்.

ஏனையோரைவிட எனது கிரிகெட் அறிவு விசாலமானது. எனது பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் எவரும் கேள்விக்குள்ளாக்க முடியாது.

ஆனால், பிரதம தேர்வாளர் (அமீர் சொகைல்) தொடர்ந்தும் இவ்வாறு நடந்துகொண்டால் நான் இராஜினாமாச் செய்வதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை.

தௌபீக் உமத், இம்ரான் பர்ஹாத் ஆகியோர் சிறப்பாக விளையாடும் நிலையில் நாலு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் குழாமில் சேர்ந்தமை பொருத்தமற்றது.

அணியின் செயற்பாடுகளுக்கு அணித் தலைவரும் பயிற்றுநருமே பொறுப்பு. நாம் நீண்டகாலத் திட்டமொன்றின்படி செயற்படுகிறோம். இவ் விவகாரம் தொடர்பாக பாக்.கிரிக்கெட் சபைத் தலைவர் நாடு திரும்பியவுடன நான் பேசுவேன் - இவ்வாறு செளவ் விட் மியாண்டட் தெரிவித்தார்.

**சபைத்தலைவரின் அங்கீகாரமில்லை**

இதேவேளை, "பாக்கிரிக்கெட் சபையில் பதில் தலைவரான ரமீஸ் ராஜாவின் அங்கீகாரத்தையும் அமீர் சோகைன் பெறவில்லை என மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

பாக்.கிரிக்கெட் சபையின் விதிகளின்படி வீரர்கள் பட்டியலை வெளியிடமுன்னர் சபைத் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும்.

சபைத் தலைவரான தாகிர் ஸியா தற்போது வெளிநாடு சென்றுள்ளார்.

அதனால், சபையில் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பதில் தலைவருமான ரமேஸ் ராஜாவிடம் சொஹைல் வீரர்கள் பட்டியலுக்கு அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும். ஆனால், அதை அவர் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ரமீஸ் ராஜா கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். இவ் விவகாரம் தொடர்பாக அவர் விசனமடைந்துள்ளார் எனவும் மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமீர் சொஹைலும் பாக்.அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவராவார். வீரர்கள் தேர்வு தொடர்பாக அமீர் சொஹைல் சர்ச்சையில் சிக்கியமை இது முதல் தடவையல்ல.

சபைத் தலைவர் தாகிர் ஸியாவன் மகன் புனைட் சியாவை அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பாக். 'ஏ' அணித்தலைவராக அறிவித்தார் சொஹைல்.

ஆனால், அடுத்தநாளே ஜினைட் சியாவை நீக்கிவிட்டு ஹைசர் இக்பாலை தலைவராக நியமித்தார் தாகிர் ஸியா. (ஒ-5)

# இரு தாயக அணிகள் வெளிநாடுகளுக்கு!

## அடுத்தவருடம் செல்கின்றன.

யாழ்ப்பாணம், நவ.11

கரபந்தாட்டம் மற்றும் உதைபந்தாட்ட அணிகளை அடுத்த ஆண்டு முற்பகுதியில் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிககைகளை தமிழீழ விளையாட்டு துறை மேற்கொண்டு வருகிறது.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுபபாளர் மாதுளன்.

பிரபல சைக்கிளோட்ட வீரர் க. செலவராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் சமீபத்தில் சுன்னாகம் மயிலணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாதுளன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ வலைபந்தாட்ட அணி பிரிட்டன் சென்று அங்கு பல போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியும் பெற்றது.

இதே போன்று உதைபந்தாட்டம் மற்றும் கரைபந்தாட்ட அணிகளை அடுத்த வருட முற்பகுதியில் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லவுள்ளோம்.

தாயக உதைபந்தாட்ட அணியைத தெரிவு செய்வதற்கு வசதியாக யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி உதைபந்தாட்ட அணிகளை ஒருங்கிணைத்து போட்டிகள் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து கரபந்தாட்டப் போட்டியையும் நடத்தவுள்ளோம்.

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் அடுத்த வருடம் நடத்தப்படவுள்ள 3 ஆவது தமிழீழ தேசியப் பெருவிளையாட்டு விழா நிறைவடைந்ததும் இவ்வணிகள் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளன.-என்றார் அவர் (ஓ-5,86)

## விளையாட்டு நிகழ்வு

வலி.வடக்கு,நவ.11

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டத்தினரும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றும் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★வடமராட்சி சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழகம்.

★நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகம்.

# இந்திய அணி மார்ச் மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம்

எதிர்வரும் மார்ச் மாதம் இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்காக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா நேற்றுமுன்தினம் இத்தகவலைத தெரிவித்தார்.

இந்திய அணி இவ்வருட இறுதியில் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுலா மேற்கொள்ளவுள்ளது இரண்டரை மாதச் சுற்றுலாவின் பின்னர் அவ்வணி பெப்ரவரி மாதம் தாயகம் திரும்பவுள்ளது.

"ஆஸி.சுற்றுலாவின் பின், வீரர்களுக்கு இருவாரகால ஓய்வு வழங்கப்படும். அதன் பின் இந்திய அணி பாகிஸ்தான் சுற்றுலாவுக்குத் தயாராகிவிடும்.

"இந்திய-பாகிஸ்தான் போட்டிகளைத் தொடர்ந்து ஆசிய கிண்ணப் போட்டிகள் நடைபெறும்." இவ்வாறு டால்மியா கூறினார்.

ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உட்பட ஆறு அணிகள் பங்குபற்றவுள்ளன.

1989 ஆம் ஆண்டின் பின்னர் இந்திய அணி முதல் தடவையாக பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் சுற்றுலாவை இந்திய அணி வெகுவாக எதிர்பார்த்து இருப்பதாக அவ்வணியின் தலைவர் சௌரவ் கங்குலி கூறினார்.

அங்கு செல்வதற்கு நாம் மிகவும் ஆவலாக இருக்கிறோம். அது மிகப்பெரிய நிகழ்வாக அமையும். இந்திய பாகிஸ்தான் போட்டிகள் எப்போதும் எழுச்சி மிகுந்ததாக இருக்கும். இரு அணிகளுக்குமே இப்போட்டிகள் சவாலானவை.

இவ்வாறு கங்குலி நேற்றுக் கூறினார்.

# நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கு உளவியல் நிபுணரின் ஆலோசனை

நியூஸிலாந்து கிரிக்கெட்டின் விளையாட்டு உளவியல் நிபுணர் இப்பர்ட் இனோகா இந்தியாவுக்கு பயணமாகிறார்.

ரி.வி.எஸ். கிண்ணத் தொடரில் பங்குபற்றும் நியூஸிலாந்து அணியில இனோகா இணைந்து கொள்வார்.

நியூஸிலாந்து அணியின் சுற்றுலா குறித்து வீரர்களுடன் அவர் ஆலோசனை நடத்தவுள்ளார். அதே வேளை, தற்போது இந்தியாவில் நடைபெறும் ரி.வி.எஸ். கிண்ணத் தொடரின் போட்டிகளுக்கும் நியூஸிலாந்து அணிக்கு அவர் உதவுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம், தொடர்ச்சியான தனது ஆறாவது தோல்வியை தழுவியது நியூஸிலாந்து அணி. இத்தொடரில் நியூஸிலாந்து அணியின் அடுத்தபோட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

இந்திய அணியுடனான இப்போட்டியில் வெற்றியீட்டினால் மட்டும் இறுதிப்போட்டிக்கு நியூஸிலாந்து அணி தகுதிபெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக நாணயச் சுழற்சியில் தோல்வியுற்றவுடனேயே பிளெமிங் ஏமாற்றமடைந்தவராக காணப்பட்டார்.

"குறைபாடுகளை இனம் கண்டு அவற்றைச் சீர்செய்யவேண்டிய முக்கியமான தருணம் இது"-இவ்வாறு பிளெமிங் கூறியுள்ளார்.

## கோர்ணிகோவா மறுப்பு

டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்குத் தாம் தீர்மானிக்கவில் லையென ரஷ்ய வீராங் கனையான அனா கோர்ணிகோவா தெரிவித்துள்ளார்.

22 வயதான கோர்ணிகோவா, முதுகில் ஏற்பட்ட உபாதை காரணமாக பல சுற்றுப் போட்டிகளில் விளையாடவில்லை. இவ் வருடம் ஆரம்பத்தில் ஆவஸ்திரேலிய பகிரங்கத் தொடரில் முதல் சுற்றில் ஸ்லோ வாக்கியாவின் நக்யோவாவை கோர்ணிகோவா வென்றார். கோர்ணிகோவா இவ் வருடம் பெற்ற ஒருயொரு வெற்றி இதுவாகும்.

கடந்த மார்ச் மாதத்தின் பின்னர் அவர் உத்தியோகபூர்வ போட்டிகளில் பங்குபற்றவில்லை. இந்த நிலையில் தாய்லாந்துக்கு விஜயம் செய்துள்ள கோர்ணிகோவா நேற்றுமுன்தினம் கண்காட்சி போட்டி ஒன்றில் பங்குபற்றினார்.

அதன் பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் "இப்போது நான் டெனிஸ் விளையாட விரும்புகிறேன்". ஆனால் முதுகில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக தொடர்ச்சியாக ஒரு வார காலத்துக்கு மேல் விளையாட முடியாதுள்ளேன்- என்றார்.

# ஓவர் குறைந்த போட்டிகளை நடத்த அனுமதி கோருகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தான்-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரில் குறைந்த எண்ணிக்கையான ஓவர்களைக்கொண்ட போட்டியொன்றை நடத்த ஐ.சி.சியிடம் பாக்.கிரிக்கெட் சபை அனுமதி கோரியுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத் தொடரில் முதலாவது போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி பைஸாலாபாதத்தில் நடைபெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு இப்போட்டியை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், காலைவேளையில் இம்மைதான ஆடுகளத்தில் பந்துகள் வேகமாக எகிறுகின்றன. இதனால், முதலில் களத்தடுப்பு செய்யும் அணிக்கு போட்டி சாதகமாகிவிடும். எனவே, நாணய சுழற்சியே போட்டியின் வெற்றி தோல்வியைத் தீர்மானித்து விடும் என பாக். கிரிக்கெட் சபை கூறுகிறது.

இது குறித்து பாக். கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி, ரமீஸ்ராஜா கூறுகையில்,

"அண்மையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக கிண்ணப் போட்டிகளிலும், இந்தியாவில் நடைபெறும் முக்கோணக் கிரிக்கெட் தொடரிலும் காலை 830 மணியளவில் போட்டிகள் ஆரம்பிப்பது. முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கு முறையற்ற விதத்தில் சாதகமாக அமைந்துவிடுகிறது.

அதனால் போட்டியை தாமதமாக ஆரம்பித்து, இரு அணிகளுக்கும் தலா 40 அல்லது45 ஓவர்களை வழங்குவது சிறந்தது.

இத் தொடரின் இரு போட்டிகள் ரமழான் காலத்தில் நடைபெறவுள்ளன. ஆதலால்; நோன்பு துறப்பதற்கு வசதியாக இரண்டாவது இன்னிங்ஸில மேலதிக 10-15 நிமிட இடைவேளை வழங்கவேண்டும்.

நியூஸிலாந்தும் ஐ.சி.சியும் இம் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் என நம்புகின்றோம்-இவ்வாறு ரமீஸ்ராஜா கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துக்குமாரு இராசம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முத்துக்குமாரு - இராசம்மா அவர்கள் நேற்று (10.11.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் சபாபதிபிள்ளை (இளைப்பாறிய வேலை மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), Dr. தியாகேசபிள்ளை, யோகா - இரட்ணராஜா (இளைப்பாறிய முன்னாள் சித்திர ஆசிரியை, செங்குந்த இந்துக்கல்லூரி), ஆனந்தகுமாரன் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, ராதா, ரட்ணராஜா, வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் ருத்திரன், சுஜீவா, கவிதா, இராஜராஜன், தூயவன், அன்பன், அனுசியா, இன்பன், ஷானி, குமரன், அகல்ஜா, கார்த்திகா, தனுஜன், சங்கீதா, பாலமுருகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யாதவன், அபிதா, அமிர்தா, சங்கீத், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2003) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது மகனது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*இல: 167/5, கோவில் வீதி.*
*நல்லூர்.*
(24609) (33-11-16-32)
தகவல்:
மருமகள்.

## திருமதி அரியகுட்டி சிவக்கொழுந்து

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியகுட்டி சிவக்கொழுந்து அவர்கள் நேற்று(10.11.2003) திங்கட்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி அவர்களின் அன்பு மனைவியும் கெங்காகுலரத்தினம், கருணாதேவி (பிரான்ஸ்), கனகசிங்கம், தர்மகுலசிங்கம், குணசிங்கம், அமரசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான அருந்தவம், இராஜராணி மற்றும் சகுந்தலாதேவி, பிரேமரஞ்சினி, தங்கா ஆகியோரின் அன்பு மாமியாரும் கேமலா, கெளிந்தன் (பிரான்ஸ்), மீரா, கேமன், பிரான்ஸில் வசிக்கும் கிருபாகரன், ரஞ்சினி, பாபு, பபா, சுகிதா மற்றும் கல்பனா (பிரான்ஸ்), பவிதா, அஜி, துவாரகன், தீபன், ரஜீபன், தீபா, திலக்ஷன், ரஜிக்ஷன், இலக்கியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சௌமியாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2003) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கெங்கா குலரத்தினம்
*மானிப்பாய்*
(24603) (33-11-16-32)
(மகன்)

## நாகரத்தினம் கணேசன் (விக்கினேஸ்)

கல்வியங்காடு டச்சு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரத்தினம் கணேசன் (விக்கினேஸ்) நேற்று (10.11.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் செல்வத்துரை, துரைசிங்கம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மாவதியின் அன்புக் கணவரும் அருந்தவச்செல்வி, பார்த்தீபன், சிசுபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் ரவீந்திரன், பவானி, ரேவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன், மாதுஸ்யா, லாவண்யா, ஆதித்தியன், சாருகா, அபிராம், யதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.11.2003) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி, பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S. வீதி.*
*கல்வியங்காடு.*
(24606) (33-11-16-32)
தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

ஐ.ரி.என். பணிப்பாளர் சபை நியமனம்

# ஊடகத்துறைச் செயலாளர் கோரிக்கை; நிதியமைச்சின் செயலாளர் நிராகரிப்பு!

சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கு (ஐரி.என்) தலைவர் உட்பட புதிய பணிப்பாளர் சபை ஒன்றை நியமிக்குமாறு ஊடகத்துறை அமைச்சின் புதிய செயலாளர் விடுத்த கோரிக்கையை நிதியமைச்சின் செயலாளர் சரித்தரத்வத்தை நிராகரித்திருக்கிறார்.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, நிதியமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம் என்பதாலேயே ஊடகத்துறை அமைச்சின் புதிய செயலாளர் இக்கோரிக்கையை நிதி அமைச்சின் செயலாளரிடம் விடுத்திருக்கிறார்.

இக்கோரிக்கையை நிதியமைச்சு செயலாளர் நிராகரித்திருப்பதால் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை நிறுவனத்தில் நிதி தொடர்பான பொறுப்பு குறித்து பிரச்சினை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் தொங்கவிடப்பட்டிருந்த அதன் ஆரம்ப கர்த்தாவான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் உருவப்படம் அங்கிருந்து அகற்றப்பட்டிருப்பதாக ஊழியர்கள் சிலர் கூறுகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் ஆகியோரின் உருவப் படங்களும் அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கின்றன.

## பட்டதாரிகள் நியமனம்.

கண்டி மாவட்டத்தில் 309 பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இதில் 72 பேர் தமிழ்ப் பட்டதாரிகளாவர். இவர்கள் அனைவரும் கஷ்டப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் கட்டாயமாக பணியாற்றவேண்டும் என்று மத்திய மாகாண கல்வியமைச்சர் பெராதக் கிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ்ப்பட்டதாரிகளுக்கு பௌதிகம், விஞ்ஞானம், உயிரியல் போன்ற துறைகளில் பணியாற்ற நியமனங்கள வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


வைத்திய சேவை

வாதரோகங்கள், சருமரோகங்கள், ஆஸ்த்மா?, மலேரியா, நீரிழிவு, உடல் பருமன், உடல் மெலிவு, தலைமுடி உதிர்தல், தலைமுடி நரைத்தல் உட்படச் சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர் த.சிவானந்தன்

"ஹோப் கிளினிக்"

264, பலாலி வீதி - கந்தர்மடம்,
(பேபி போட்டோ முன்பாக)

(24608) (33-11-16-36)


# ஜனாதிபதியின் தேசிய அரசு அழைப்பு; பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

## அஷ்ரப் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ.11

தேசிய நல்லிணக்க அரசொன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி விடுத்திருக்கும் அழைப்பு வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம். நாம் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருக்கிறோம் என்று அஷ்ரப் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சுபைதீன் ஹாஜியார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், தற்போது நாட்டில் உருவாகியிருக்கும் அரசியல் சூழ்நிலையை நாம உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் அரசியல் சூழ்நிலைக் கேற்பவே முடிவுகள் மேற்கொள்வோம் என்றார்.

ஜனாதிபதியை அஷ்ரப் காங்கிரஸின் தலைவர்கள் நேற்று முன்தினம் சந்தித்து கலந்தாலோசனை நடத்தினர் என்று கூறப்படுவது பற்றி கேட்டபோது தனிப்பட்ட ரீதியாகச் சந்தித்திருக்கலாம். ஆனால் கட்சி ரீதியான எந்த முடிவையும் நாம் எடுக்கவில்லை. கிழக்கு மாகாணத்தின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்திருக்கலாம்-அது பற்றி எமக்கொன்றும் தெரியாது. தொடர்ந்தும் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவிருக்கிறோம் என்று அவர் பதிலளித்தார்.

(ஒ)

## பிரதேசமலர் வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.11

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேசத்தின் வரலாறு, பண்பாட்டு விழுமியங்கள், சமயவரலாறு மற்றும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக பிரதேச மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் இந்த மலர் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேசம் தொடர்பாக இந்த மலரில் ஆக்கங்களை பிரசுரிக்க விரும்புவோர் உதவி அரச அதிபர் பணிமனையுடன் தபால் மூலமோ அன்றி நேரிலோ தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


ராஜா யாழ்ப்பாணம்

விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த

பிதாமகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

(C-29904) (30)

நாகம்ஸ் சுன்னாகம்

உலகமது வெற்றி வாரம் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



திருமலை

தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)

லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த

திவான்

காட்சி நேரம்: 3.00, 7.00.

புதன் முதல் பிரசாந்த், ஷாலினி நடித்த

பிரியாத வரம் வேண்டும்

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், தேவயானி நடிக்க

ஒருவன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)

AMERICAN BEAUTY


# மனமுவந்து வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தின் உரிமையாளரும் கொழும்பு றோயல் இண்டஸ்றீஸ் தொழில் அதிபரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

**உயர்திரு. துரைச்சாமி குருநாதசிவம்**

அவர்கள் 06.11.2003 இல் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைந்து மனமுவந்து வாழ்த்துகின்றோம்.



தமது சிறு பராயத்திலிருந்தே அயராது உழைத்ததன் பயனாக ஒரு பெரும் நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் பல பணியாளர்கள் நன்மை பெற வழிவகுத்தமைக்கு ஏற்ப இவருக்குப் பொருத்தமான இந்தப் பதவி கிடைத்துள்ளமையையிட்டு பணியாளர்களாகிய நாம் இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரது அளப்பரிய அரும்பணி மேன்மேலும் சிறந்து வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– பணியாளர்கள்

"சிவாநறுமணப் பூங்கா" யாழ்ப்பாணம்
றோயல் இன்டஸ்றீஸ், கொழும்பு.

# நீங்காத நினைவுடன் 10ஆம் ஆண்டு நினைவில்

| வீரப்பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 28 | | 11 |
| 11 | | 11 |
| 1963 | | 1993 |



## தென்மராட்சிக் கோட்டத் தளபதி
# லெப்.கேணல் குணா
## சுந்தரம் விஜயராசா

வெற்றிகளுக்காய் இவன் பெயரை
என்நாளும் உச்சரிப்போம்
வெந்தணல் களமாடும்-இவன்
புன்சிரிப்பு ஒன்றுடன்
போய்வருவான்-எங்கள்
குணா இவன் எங்கே?

நேர்மைக்காய் தினம் உழைப்பவன்
போர் நெறிகளை மனதிலே
வரைபவன்
ஏணியாய் எமக்கெல்லாம் இருந்தவன்
எங்கள் பாசமகன் குணா.

தலைவரின் அன்புக்கு உரித்தானவன்
தமிழ் உலகிற்கு தமிழீழம் ஒன்றுதான்
விடுதலை எனச் சொன்னவன்
தாயாகி தந்தையாகி தன்னலமற்று
உழைத்தவன் குணா
எங்கள் பாசமகன் எங்கே?

பத்தாண்டுகள் தான் போனதடா
குணா உன் பசுமை நினைவுகள்
எம்மைவிட்டு நீங்கவில்லை
ஆயிரமாயிரம் பாதங்களுடன் இறுதி
வரை எங்கள் பயணங்கள் தொடரும்.

**தமிழீழ விளையாட்டுத்துறை**

(C312331) (32-16-11-36)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 | | 12 |
| 04 | | 10 |
| 1940 | | 2003 |



## அமரர் செல்லர் அரசலிங்கம்
**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்)**

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிச்சுடரே!
எம்மில் அனைத்துமாய் நிலைபெற்று ஆதரித்து எம்மைச் சீராய் சிறப்பாய் வாழவைத்த தெய்வமே!
நீண்டதூரம் நீங்கள் சென்றாலும் உங்களது நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது!

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (11.11.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. ஆகவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சோழன் தோட்டம்,
கோண்டாவில் வடக்கு. (24612)(32-36-11-16)

# இந்த நிலைமையே தொடருமானால் தேர்தலைத் தவிர வேறு வழியில்லை!

## இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

தற்போதைய நிலை தொடருமானால் தேர்தல் ஒன்றை சந்திப்பதைத் தவிர வேறுவழியில்லை இவ்வாறு தெரிவித்தார் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா, தான் பொறுப்பேற்றுள்ள அமைச்சுக்களை தொடர்ந்தும் தன்வசமே வைத்துக் கொண்டு - சமாதான முயற்சிக்கு வெறும் உதட்டளவில் மாத்திரம் ஆதரவு தெரிவிக்கிறார். இந்த நிலை தொடர்வதாக இருந்தால் மற்றொரு தேர்தலைச் சந்திப்பதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை இப்படி தெரிவித்தார் இரா.சம்பந்தன். (ஒ-9)

## இன்று பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடர் ஹெல்கிஸன் இன்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள், லக்ஷ்மன் கதிர்காமர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஈ.பி.டி.பி., புளொட் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திப்பார். ஹெல்கிஸன் நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்திப்பார்.

நாளைமறுதினம் கிளிநொச்சிக்குச் செல்லும் ஹெல்கிஸன் அங்கு புலிகளின் பிரதிநிதியைச் சந்திப்பார்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் மத்தியில் புலிகளுடன் இடம்பெறவுள்ள இப்பேச்சு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று கருதப்படுகிறது.

இதேசமயம், சமாதான முன்னெடுப்புக்களின் தமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ள விடுதலைப் புலிகள், ஜனாதிபதியின் நடவடிக்கைகளால் சமாதான முன்னெடுப்புக்கள் பாதிப்படையலாம் என்று கருதுவதாக தெரிகிறது.

ஆகவே, சமாதான முயற்சிகள் சம்பந்தமான சில கடுமையான நிலைப்பாடுகளை இப்பேச்சின்போது விடுதலைப் புலிகள் தெரிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-4)

## சிங்களத் தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்வல் சிபல் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

"அங்கு குழப்பமான நிலையே நிலவுகின்றது. முக்கிய அரசியல் வடயங்களுடன் தொடர்புபட்ட அறிக்கைகள் வெளியானதை தினமும் காண்கிறோம்.

"சமாதானம், ஸ்திரத்தன்மையும், சமாதான முயற்சிகள் பேணப்படுவதையுமே ஒவ்வொருவரும் விரும்புகின்றார்கள்.

"சிங்களவர் தரப்பில் - அதாவது அரச மற்றும் எதிர்க்கட்சிகள் தரப்பில் - ஐக்கியம் இருக்குமானால் சிறந்த முறையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

"சூழ்நிலை இலகுவானதல்ல, அரசமைப்பு தீர்வு ஒன்று காணப்பட்டால் தான் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படமுடியும்.

நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். சிங்களக் குழுக்கள் தங்களுக்குள் இணைந்து செயற்படவேண்டும். நெருக்கடி தணிக்கப்பட்டு இரு தரப்புக்களுமிடையில் ஏதோ ஒரு வகையான பேச்சு இடம்பெறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்." - என்று மேலும் தெரிவித்தார் வெளியுறவுச் செயலாளர் கன்வல் சிபல். (ஒ-9)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்ப்புக்கு அமெரிக்கா கட்டுப்படாவிட்டால் பலகோடி டொலர்கள் மதிப்புடைய வர்த்தகம் தொடர்பில் அமெரிக்கா மீது தண்டனை வரிகளை விதிக்கப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்திருக்கிறது.

அமெரிக்காவின் எஃகு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க அதிபர் புஷ் இறக்குமதிகள் மீது சென்ற ஆண்டு வரிவிதித்திருந்தபோது ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், பிரேஸில், ஆகியவை உலக வர்த்தக மையத்தில் முறையிட்டன.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் அறிவித்துள்ளது.

இந்த உத்தேச கூட்டமைப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக வார இறுதியில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை - ஜனாதிபதியின் இந்த அழைப்புக்கடிதம் பிரதமரிடம் கையளிக்கப்பட முன் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிக்கையில்

தேசிய நல்லிணக்க அரசு பற்றி ஜனாதிபதியுடன் பேசத்தயாரில்லை என்றும் -

நாடாளுமன்றில் போதியபெரும்பான்மை பலம் பெற்றுள்ள தமது அரசுக்கு அவ்வாறன ஒரு தேவை இப்போது இல்லையென்றும் -

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது நாடாளுமன்றத்தை கூட்டுவது ஆகிய சவால்களுக்கு முன்தேசிய அரசு பற்றிய பேச்சுத் தேவையற்றது என்றும் கூறினார்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மு.கா. சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இ.தொ.கா. சார்பில் ஆர்.யோகராஜன், ம.மு.முன்னணி சார்பில் அமைச்சர் பெ.சந்திரசேகரன் கூட்டணி சார்பில் இரா.சம்பந்தன், தமிழ் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் ஏகோபித்த குரலில் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டவேண்டுமென்று சபாநாயகரை வலியுறுத்தினர்.

நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டவேண்டிய அவசியத்தை எழுத்து மூலம் தம்மிடம் அறிவிக்கும்படி சபாநாயகர் கேட்டுக்கொண்டார். இதையடுத்து இன்று நண்பகல் 12 மணிக்கு முன் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கைச்சாத்துடன் சாபாநாயகருக்கு கடிதமொன்றை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 6ஆம் திகதி கூடவிருந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 19ஆம் திகதிவரை ஒத்திவைத்திருப்பது தெரிந்ததே.

## தேர்தலை எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் செய்யவேண்டியது என்று பிரதமர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சமாதான முயற்சிகளை பொறுப்பேற்றால் சமாதான முயற்சிகளுடன் தொடர்புபட்ட தரப்புக்கள் அவரது புதிய பங்களிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதான முயற்சியை முற்று முழுதாக பொறுப்பேற்க ஜனாதிபதி விரும்புவாரேயானால் அம்முயற்சியில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியுமேயானால் - அம்முயற்சியின் பொறுப்பை அவரிடம் ஒப்படைக்க அரசு தயார். இந்த யோசனைக்கு ஆக்கபூர்வமான பதில் இன்றேல் சமாதான முயற்சியின் சகல அம்சங்களினதும் பொறுப்பு நவம்பர் 4ஆம் திகதிக்கு முன்னர் இருந்தவாறு அரசிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

சமாதான முயற்சியின் வெற்றிக்கு ஒரு முன்தேவையாக அம்முயற்சிககு ஒருவரே முழுப்பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை அரசு உறுதியாக நம்புகிறது. அம்முயற்சியின் சகல அம்சங்களினதும் கட்டுப்பாடும், அம்முயற்சியோடிணைந்த எல்லா விடயங்களிலும் பொறுப்புக்கொண்ட நிறுவனங்களும் சம்பந்தப்படுவது அவசியமானதாகும்.

சமீபத்திய சம்பவங்களின் பின்னணியில், வெட்டிக்குறைக்கப்பட்ட பொறுப்பு சகவாழ்வையும் சமாதான முயற்சியின் ஆக்கபூர்வ தன்மையையும் அழித்துவிடும் என்பதை அமைச்சரவை வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

சமாதான முயற்சிக்கு வழிகாட்டும் கண்காணிக்கும் இறுதிப் பொறுப்பு நாடாளுமன்றத்திடமே உள்ளது. முன்னைக்காட்டிலும் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் மிகவும் அவசியமான ஒரு காலகட்டத்தில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

கடந்த சில தினங்களாக அரச ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் விதம் சமாதான முயற்சிக்குப் பாதகமானதாகும்.

ஏனைய விடயங்கள் பற்றி ஆராயப்படுவதற்கு முன்னர், சமாதான முயற்சிக்கான பொறுப்பு பற்றிய அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று அமைச்சர்கள் கருதுகிறார்கள்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அரசு அமைக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம்வகிக்கும் ஒரு கட்சியின் மூன்று எம். பிக்கள் ஜனாதிபதியுடன் இரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.இவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிக்க ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இரண்டாவது பிளவுபட்டுள்ள கட்சியின் நால்வர் அணியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியின் அழைப்புக்கிணங்க அவரைச் சந்தித்துள்ளது. இந்த அணியின் நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி இணங்கியிருக்கிறார் எனவும் இதனையடுத்து நால்வர் அணியினர் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவளிக்க உறுதியளித்துள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

நால்வர் அணியினர் பொரளையிலுள்ள முன்னாள் அமைச்சரொருவரின் இல்லத்தில் கூடினர் எனவும் ஜனாதிபதியும் இங்கு வருகைதந்தார் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மாற்று அரசை அமைப்பதற்கு மேலும் சில எம்.பிக்களின் ஆதரவு தேவைப்படுவதால் பொ.ஐ.முன்னணியின் பார்வை இப்போது மலையக கட்சிகளின் பக்கம் திரும்பியிருக்கிறது. மேலும் சில புதுமுக எம்.பிக்களையும் முன்னாள் அமைச்சர்கள் சிலர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

## சமாதான முயற்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஐ.தே.கவின் தலைமையகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் ஐ.தே.க.சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தச் செயற்குழுக் கூட்டம் தொடர்பாக ஐ.தே.க. வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இரு தசாப்த கால - நீண்ட - யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானத்தை நோக்கி நாடு செல்கையில், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றிருப்பது அவருக்குப் பதவி மேல் உள்ள பேராசையைக் காட்டுகின்றது. அவரின் இந்த நடவடிக்கை சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கையாக மட்டுமன்றி மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது.

சமாதானத்தின் மூலம் சதாரண வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலும் - சமாதானத்தின் பிரதிபலனைப் பொருளாதார ரீதியிலும், அபிவிருத்தி ரீதியிலும் அரசு மக்களுக்கு அளிக்க இருந்த நிலையில் - ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளை மக்களுக்கு ஜனாதிபதி இழைக்கும் துரோகமாகவே கருத வேண்டும். கீழ்த்தரமான இச்செயற்பாடுகளை ஐ.தே.க. முறியடிக்கும்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 14.11.2003 இற்கு முன் நேரில்




எமது நேற்றைய
வீடியோ CD வெளியீடு
பிரகாஷ்ராஜின்
மாணிக் பாட்ஷா
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.

CHEMISTRY
DIAS B.Sc.(Hons) Sp.in.Chem.
★ அலகு ரீதியான
★ ஆண்டு ரீதியான
மீட்டல் வினா - விடை
வகுப்புக்களின்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
104/4, Cross Road, Athiyady.

வடமராட்சி, யாழ். - கொழும்பு
பயணிகள் வான் சேவை
நேரடியாகவும் தொலைபேசி மூலமும்
ஆசனப் பதிவு செய்யலாம்
வாடிக்கையாளர் கட்டணம் 900=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478447, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக....
எதிர்பார்ப்புக் கட்டுரைத் தொகுப்பு
கட்டுரைப் பகுதிக்குக் கிடைக்கின்ற 12 புள்ளிகளையும் இலகுவாகப் பெற்றிட புதிய பாடத்திட்டத்தை அமைவாகக் கொண்டு
ஆசிரியர் திரு. வே.அன்பழகன் அவர்களால்
விசேடமாகத் தொகுக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பு வெளிவந்துவிட்டது!
அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
பாடசாலைகளுக்கு விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
தயா அச்சகம்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. : 222-2881
ஞானக்குழந்தை
கல்விக்கழகம்
சிவன் வீதி, திருநெல்வேலி.
T.P. : 777-244094

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.